நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம்
14.09.1901

செந்தமிழ்

பகுதி: 7
தொகுதி: 113
திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்
விலை: ரூ.20
ஜூலை - 2019

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
1867-1911

மன்னர் பாஸ்கர சேதுபதி
1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
பேராசிரியர் **இரா.சதாசிவம்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்ப முரளி**	உறுப்பினர்
பொறியாளர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறியாளர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **ம.லெல்லிஸ்திவாகர்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1. இதழ் மணம் - பேராசிரியர். இரா. சதாசிவம் 4

2. சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா 6
- முதுமுனைவர். இரா. இளங்குமரனார்

3. சிலப்பதிகாரம் : உருசிய நாட்டு அறிஞர் பக்தினை முன் வைத்து - பேராசிரியர். ப. மருதநாயகம் 10

4. தொல்காப்பியரின் திணைப் பகுப்பும் அமைப்பும் 21
- பேராசிரியர். மு. மணிவேல்

5. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் அழகியல் 27
- பேராசிரியர். ம. திருமலை

6. சங்கச் செய்திகள் 41

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள்கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

முதுமுனைவர் இரா.இளங்குமரனார் புறுநானூற்றில் இரும்பிடர்த்தலையாரின் பாடலையும் அப்பாடலின் பின்புலத்தையும் வாசகர்களுக்கு உணர்த்துகிறார். இரும்பிடர்த்தலையார் சோழஅரசர் வழிவந்தவர். புலத்துறை முற்றிய புலவரும் ஆவார். அவர் பாண்டியன் பெரும் பெயர் வழுதியைப் பார்க்கிறார். இரும்பிடர்த்தலை யானை மீதூர்ந்து பகைவரை வெல்லும் பெருவீரனவன். போர்க்களமே வாழ்வு அல்ல: உயிர் உயிர் இரக்கத்தைப் பொறுத்தே சிறப்புறும். இவ்வுண்மையைச் செவி அறிவுறுத்தலாகப் பாண்டியனுக்குக் கவிஞர் சொல்ல விரும்புகிறார். இவ்விடத்தில் கேட்போன் தகுதியைச் சொன்ன பாடல், பாடல் ஆசிரியன் தகுதியைச் சொல்லாமல்விட்டது ஒரு குறை; அதனை நிறைவு செய்ய வேண்டியது இளங்குமரனாரின் கடப்பாடு; யார் இந்த இரும்பிடர்த்தலையார்? பழமொழி நானூறு சான்றோராகிய இரும்பிடர்த்தலையார் குறித்த செய்தியை அறிவிக்கும் நுட்பத்தை எடுத்துரைத்துக் கட்டுரையைப் பேராசிரியர் இளங்குமரனார் நிறைவு செய்கிறார். பழமொழிநானூற்றில் இடம் பெற்றிருந்தால் அவர் எல்லோரும் அறிந்தவராக இருக்கவேண்டும். அவர் அறிவுறுத்திய செய்தி அவரை மக்கள் புலவராக எடுத்துரைக்கிறது. புறநானூற்றுப் புலவன் பழமொழி நானூற்றிலும், இடம்பெறும் தகுதி பெறுகிறான். காலத்தை வென்று நிற்கும் கவிதை; இதுதான் படைப்பின் ரகசியம். இரும்பிடர்த்தலை என்னும் சொல்லாட்சியும் கவிதை மாண்பும் நினைவு கொள்ளத்தக்கது.

இரசிய நாட்டு இலக்கியத் திறனாய்வாளர் "பக்தின்" என்பவருடைய திறனாய்வுக் கருத்துக்கள் சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொல்காப்பியம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமாக அமைந்திருப்பதற்குரிய கட்டமைப்பை ஒப்பிட்டுப் பேராசிரியர் ப. மருதநாயம் விளக்கும் நுட்பம் இவ்விதழில் இடம் பெறுகிறது. உலக முழுவதும் உள்ள காப்பியங்கள் ஒரே வகையான செய்தியை மாற்றம் இல்லாத சலிப்பூட்டுகின்ற கட்டமைப்பில் பேசுகின்றன. ஆனால் சிலப்பதிகாரம் வேறுபட்டு காப்பிய உத்தியோடு நாவல் இலக்கிய உத்தியையும் கையாண்டு இளங்கோவடிகள் நூலைப் படைத்திருக்கும் திறன் இரசிய நாட்டு அறிஞர் பக்தின் திறனாய்வுக்கு ஒத்தமை உடையதாக இருப்பது வியப்பூட்டும் உண்மை என்பதை ப. மருதநாயகம் தெளிவுறுத்துகிறார். உரையாசிரியர் காலத்திற்கு முன் தோன்றிய இலக்கியம் உரையாசிரியர்களுடைய திறனாய்வுக்கும் பாராட்டுக்கும் உரியதாகி இருப்பதோடு பக்தின் போன்ற மேலைநாட்டுத்

திறனாய்வாளர் கருத்திற்கும் ஒத்திசைவுடையதாக இருப்பது பெரும் வியப்பூட்டும் உண்மையாகும். இது ஒரு வியத்தகு புரட்சிக் காப்பியம் எனப்போற்றுவார் என்னும் செய்தி சிலப்பதிகாரம் காலத்தை வென்று, வரும் தலைமுறையும் போற்றும் இலக்கியமாக அமைந்திருப்பதை பேராசிரியர் ப.மருதநாயகம் தெளிவுபடுத்தியுள்ளார்.

பேராசிரியர் மு.மணிவேல் "திணைப்பகுப்பும் அமைப்பும் குறித்து தொல்காப்பியருக்கு முன்பு இருந்த வழக்கைப் பின்பற்றி எடுத்துரைப்பதில் உள்ள ஐயங்களைக் கட்டுரையில் சுட்டித் தம் ஆய்வை நிறைவு செய்துள்ளார். அகத்திணை, புறத்திணை – எழுதிணைப் பகுப்பும் முன்னோர் மொழிந்ததாகக் குறித்திருக்கிறார். ஆனால் முன்னோர் குறித்த வரிசை முறை எது என்பது விளக்கப்படவில்லை என்பது ஆசிரியர் மணிவேல் அவர்களுடைய கேள்வி; தொல்காப்பியம் குறித்த ஆய்வு ஒரு தொடர்ச் சிந்தனை; அறிதோறும் அறியாமை தோன்றுவது போலவும், நவில்தொறும் நூல் நயம் தோற்றுவது போலவும் தொல்காப்பியம் கற்கும் தோறும் இனிய பல கேள்விகள் தோன்றி நூலினை மீண்டும் மீண்டும் கற்று இன்புறத்தூண்டும் அரிய நூல் என்பதைக் காட்டுகிறது.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முருகியல் கற்பவர்களுக்குச் சொற்பொருள் இன்பம் அளித்து மகிழ்விக்கிறது. குமரகுருபரர் பாவின் சொற்சுவையும் பொருட்சுவையும் உ.வே.சாவை ஈர்த்தது. மதுரை, திருவாரூர், சிதம்பரம், காசி எனப் பல ஊர்களில் அவர்பாடிய பாடல்கள் தொகுக்கப்படவில்லை: பாடல் சுவையில் ஈடுபட்ட கும்பமுனி எனத் தோன்றும் சாமிநாதப்புலவன் குமர குருபரரின் பாடல்களையெல்லாம் தொகுத்து தக்க ஆராய்ச்சி உரை, அடிக்குறிப்பு அரும்பதவுரை எனச் சங்க நூல்களைப் பதிப்பித்தது போல் குமரகுருபரரின் நூலையும் தமிழ் மக்கள் முழுமையாகக் கற்கும் வண்ணம் பதிப்பித்து நூலை வெளியிட்டார். அதனைப் பார்த்த திருப்பனந்தாள் மடத்தம்பிரான் வியந்து போற்றிச்சிறப்பித்தார்.

நூலில் உள்ள கவிதைகள் தமிழ்ச்சுவைஞர்களுக்கு ஒரு தமிழ்விருந்து. அதன் முருகியல் கூறுகளைப் பேராசிரியர் ம.திருமலை அவர்கள் பாட்டின் ஒவ்வொரு தொடரையும் விளக்கி வாசகர்களுக்கு முருகியல் சுவையை ஊட்டும் நுட்பம் படிப்பவர் மனம் கொள்ளத்தக்கது.

அடுத்த இதழில் மதுரைக்காஞ்சி – மேலாய்வுக்களம் என்னும் பேராசிரியர் இ.கி. இராமசாமி அவர்களின் கட்டுரை இடம் பெறும்.

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

முதுமுனைவர். **இரா. இளங்குமரனார்**

2. இரும்பிடர்த் தலையார் :

இரும் என்பது, கரிய பெரிய வலிய என்னும் முப்பொருளும் பொருந்திய பொற்பு மிக்க சொல். இரும்பு என்பதில் இம்முப் பொருளும் உண்டு அல்லவா! இரும்பொன், கரும்பொன் என்பவை இரும்பு தானே!

அவர் தலையா, இருப்பிடர்த் தலை! அப்படி இருந்தால் தொடர்ப் பெயர் ஆகாமல், அத்தோன்றலின் பெயரே ஆகி, இப்பட்டியலில் இடம் பெற்றிருக்க மாட்டாரே!

ஒரு வேந்தன் ஏறிய களிற்றியானையின் தலையை, 'இரும்பிடர்த் தலை' என்கிறார். அத்தொடரின் அருமை உணர்ந்து அவர்தம் பெருமைப் பெயராகச் சூட்டப்பட்டது இப்பெயராம்!

களிற்றின் பிடர்த் தலையில் ஒரு வேந்தன் இருக்கிறான். அவன் பாண்டியர் வழிஞன். அவன் கை வலிய கை : அது பிடித்தது ஒளிமிக்கவாள் : பெரும் புகழாளன் அவன். அதனால் பாண்டியன் **கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி** எனப் பெயர் பெற்றான். அவனைக் கண்ட இச்சான்றோர், இப்பெருவேந்தன் சிறப்பினை அறிந்தவர். அவன் கொண்ட வளத்திற்குத் தக்க வளமான உளமும் வேண்டும் என்பதையும் உணர்ந்திருந்தார். அதனை, அவனுக்குத் தாம் உணர்த்துதல் கடமை என்பதையும் உணர்ந்தார். அதன் சீர் சிறப்புகளைக் கூறுவதோடு அவன் செவிக் கொண்டு செய்ய வேண்டிய கடமையையும் உணர்த்த வேண்டுமென்று இப்பாடலைச் **செவியறிவுறூஉ** என்னும் துறையில் பாடினார். செவியறிவுறூஉ என்பது, கைப்பான தன்மையோ, துவர்ப்பான தன்மையோ இல்லாத சொல்லாய் ஏற்கத் தக்க சொல்லொடு, செய்யத் தக்க செயலைப் பக்குவமாகச் சொல்வதாகும்.

செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே. (தொல். 1371)

என்கிறது தொல்காப்பியம்.

வாழ்த்துவது போலவும் நல்வழி காட்டுவது போலவும் இருக்கும் அதனைத் தக்கோர் ஏற்றுப் போற்றுவர் என்பதாம்.

நாட்டையே ஆளும் நாற்படை யுடையானுக்குச் சொல்வது நயனார்ந்த புலமையும் துணிவும் இல்லார்க்கு வருதலில்லை. ஆதலால் இச்சான்றோர் மேதக்க சான்றோராம்.

"முழுமதி போன்றதும் உயர்ந்து விளங்க அமைந்ததும், கடல் சூழ்ந்த நிலமெல்லாம் நிழல் பரப்புவதும் ஆகிய கொற்றக்குடை உடைய வேந்தனே,

பகையை அச்சுறுத்தி நாட்டு மக்களுக்கு நல்ல பாதுகாப்புச் செய்யுமாறு ஆழிப்படையும் முரசும் அமைந்தவரும் ஒழியாக் கொடையரும் ஆகிய பாண்டியர் மரபில் வந்தவனே.

குறைவிலா நிறைவமைந்த கற்புடைய தேவியின் பெருமைமிகு கணவனே,

பொற்பட்டம் அணிந்ததும் புள்ளிகளையுடையதும் எவரும் நெருங்கிச் செல்ல முடியாத வலிமையும் செருக்குமுடையதும் தன் தந்தங்களே கூரிய கருவிகளாய்ப் பகைவர் கோட்டைகளையும் கதவுகளையும் தகர்ப்பதும் கயிற்றால் கட்டப்பட்டுத் தொங்கி ஒலிக்கும் மணியையும் வலிய பெரிய கையையும் உடைய யானையின் கரிய வலிய பிடர்மேல் இருந்து மாற்றுவதற்கு அரிய கூற்றத்தின் செயல் போல நினைத்ததைச் செய்து முடிக்கும் **கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியே,**

நிலமே நிலைகுலைந்தாலும் நீ சொல்லிய சொல்லின் நிலை பெயர்தல் இல்லாதவனாக இருப்பாயாக!

பொன்னால் செய்யப்பட்ட அழகிய கழலையும், மணம் கமழும் சாந்தணிந்ததும் அகன்று விரிந்ததுமாகிய மார்பினையும் உடையவனே,

பாதுகாப்பாம் ஊர்கள் இல்லாதனவும், தப்பிவருவதற்கு அரியனவும், நீர் கிடைத்தற்கு அரியனவும் ஆகிய நெடிய தொலைவுடை வழியும், பார்த்தற்கு அருமையும், கூர்ந்த நோக்கும் குறி தப்பாது எய்யும் அம்பும் விட்டுக் கொல்லப்பட்டோரின் உடல் மூடப்பட்ட புதுப் புதுக்கற்குவியல்களையும், பெரிய சிறகும் வளைந்த அலகும் உடைய பருந்து இருந்து வருந்தும் நெருங்குதற்கரிய, உன்ன மரத்தின்

பலவாகப் பிரிந்து செல்லும் வழியிலே, உன்னைக் காணவேண்டும் என்னும் வேட்கையோடு இரவலர் வருவர். அவர்தம் குறிப்பை நீயே அறிந்து அவர் வறுமையைத் தீர்ப்பாய் என்னும் உறுதியால். ஆதலால் அவர் எண்ணியது தவறாமல் உதவிடுவாயாக! என்கிறார்.

புறப்பாடலில் முன்னுற மூன்றாம் பாடலாய் இப்பாடல் இருப்பதால், இப்பாடல் பழமையும், பாடு புலவன் அருமையும், பாடப்பட்டோன் பெருமையும் இப்பாடலைத் தொகுத்த தொகையாளிக்குத் தோன்றியிருக்க வேண்டும். அப்பாடல்,

உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற
ஏம முரசம் இழுமென முழங்க
நேமி யுய்த்த நேஎ நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக
செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ
பொன்னோடைப் புகரணி நுதல்
துன்னருங்திறற் கமழ்கடாஅத்
தெயிறுபடையாக எயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கில்
பெருங்கை யானை **இரும்பிடர்த் தலையிருந்து**
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி
நிலம் பெயரினும் நின் சொல்பெயரல்
பொலங்கழற்கால் புலர்சாந்தின்
விலங்ககன்ற வியன் மார்ப
ஊரில்ல உயவரிய
நீரில்லா நீளிடைய
பார்வல் இருக்கைக் கவிகண் நோக்கிற்
செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
உன்ன மரத்த துன்னருங் கவலை
நின்னசை வேட்கையின் இரவலர் வருவரது

முன்னம் முகத்தின் உணர்ந்தவர்
இன்னா தீர்த்தல் வன்மை யானே.

திணை : பாடாண்திணை, துறை – செவியறிவுறூஉ ; வாழ்த்தியலுமாம். பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதியைப் பாடியது என்பது சங்க இலக்கியப் பதிப்பு.

உ.வே.சா. பதிப்பும், ஔவை பதிப்பும், இரும்பிடர்த் தலையர் பாடியது எனப் பாடியவர் பெயரும் கொண்டது.

இவர் சோழன் கரிகாலனுடைய அம்மான்; அவனுக்குப் பெருந்துணையாய் இருந்தவர்; "சுடப்பட்டுயிருந்த சோழன் மகனும்,
பிடர்த்தலைப் பேரானைப் பெற்றறே – கடைக்காற்
செயிரறு செங்கோல் செலீஇயினான்".

என்னும் பழமொழி வெண்பாவாலும் அதன் பழைய உரையாலும் உணர்க. யானைப்பிடரை இரும்பிடர்த்தலை என்று சிறப்பித்தமை பற்றி இவர் இப்பெயர் பெற்றார் போலும். இவருடைய இயற்பெயர் தெரிந்திலது என்பது உ.வே.சா. கூறும் பாடினோர் வரலாறு. ஔவை சு.து.வும் இதனை வழிமொழிகிறார்.

சோழன் ஒருவன் பாண்டியனை இவ்வாறு பாடினான் என்பது கருதுதற்கு அரியதே. மூவேந்தரையும் கண்டபோதோ, இருவரைக் கண்டபோதோ 'இன்றே போல்க நும்புணர்ச்சி' என்று சான்றோர் வாழ்த்தினரேயல்லாமல் அவர்கள் தங்களுக்குள் கண்டு பாராட்டி செவியுறுத்தோ வாழ்த்தியோ பாடியது அருமையாம். அப்படியே ஆயினும் இவர் பெயர் இத்தொடரால் வந்தது என்பதை அனைவரும் ஏற்றுளர். இவர் இயற்பெயர் தெரிந்திலது என்றும், இத்தொடரால் பெயர் பெற்றவர் என்றும் கூறுவதில் கருத்து வேறுபாடு இல்லை என்பது இவ்வரிசையில் இடம் பெறத்தக்க பெயரே என்பதில் தடை இல்லை.

(**அரும்பொருள்:** உவவுமதி – முழுமதி; வரைப்பு – எல்லை; ஏமம் – பாதுகாப்பு ; நேமி – சக்கரம், ஆழிப்படை; நேஎ – நேயம்; புகர் – புள்ளி; நுதல் – நெற்றி; கடாஅம் – மதம்; மருந்தில் கூற்றம் – மாற்ற முடியாத கூற்றுவன்; விலங்கு அகன்ற – குறுக்கிட்டு விரிந்த; வியன் – அகன்ற; உயவு – உய்வு; கவிகண் – புருவத்தில் கை வைத்துக் குவித்து நோக்கல்; தொடை – அம்பு; வம்ப – புதுகை; பதுக்கை – மூடிவைக்கப்பட்டது; உன்னமரம் – குறிப்புணர்த்தும் மரம், முன்னம் – குறிப்பு; இன்னா – வறுமை)

சிலப்பதிகாரம்: உருசியநாட்டு அறிஞர் பக்தினை முன்வைத்து

பேராசிரியர். **ப. மருதநாயகம்**
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை – 600 113.

இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் கட்டமைப்பு, பாடுபொருள், காப்பியக்கூறுகள் ஆகியயாவற்றிலும் பிறமொழிக் காப்பியங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. உலகப் பெருங் காப்பியங்கள் என்று நாம் அறிந்த எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கூட அதற்கென்று ஒரு தனித்தன்மை இருப்பது கண்கூடு. தமிழ் இலக்கிய மரபின்படி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றெனக் கருதப்படும் சிலம்பை அதன் பதிகம் "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" என்று குறிக்கிறது. உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப்பெற்றதாதலின் இப்பெயர் பெற்றதென்று விளக்கும். சாமிநாதையர் முத்தமிழும் கொண்டு விளங்குதலின் இயலிசை நாடகப் பொருள் தொடர் நிலைச் செய்யுளென்றும் நாடக உறுப்புகளை உடைத்தாதலின் நாடகக் காப்பியமென்றும் பெயர் பெறும் என்பார். தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் நச்சினார்க்கினியர் "பாட்டிடை வைத்த குறிப்பினானுமென்பது ஒரு பாட்டினை இடையிடைக் கொண்டு நிற்கும் கருத்தினான் வருவனவும் என்றவாறு, அவை தகடூர் யாத்திரையும் சிலப்பதிகாரமும் போல்வன" என்றும் "தொன்மைதானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" என்ற நூற்பாவை விளக்கும் போது "அவை பெருந்தேவனார் செய்த பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன, சிலப்பதிகாரமும் அதன் பாற்படும்" என்றும் கூறுவார். சிலம்பின் காப்பியத் தன்மையை இப்பொழுது மீண்டும் ஆராய்ந்து மேலும் விளக்கம் பெற முயல்வார்க்கு ரஷிய நாட்டு அறிஞர் பக்தின் (Bakhtin) காப்பியம், நாவல் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் பெருந்துணை செய்யும்.

மிகப் பழமை வாய்ந்த கிரேக்க, உரோமானிய இலக்கியங்களையும் தற்கால ஐரோப்பிய இலக்கியங்களையும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குட்படுத்தி நாவலின் தோற்றம், தன்மை, வளர்ச்சி பற்றி விரிவாகப் பேசும் பக்தின் அதனைக் காப்பியத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறார். காப்பியம் அங்கீகரிக்கப்பட்ட (Canonical) உயர்த்தப்பட்ட (High) இலக்கிய வகையாகும்; நாவல் அங்கீகரிக்கப்படாத. தாழ்த்தப்பட்ட இலக்கிய வகையாகும். ஆசிரியன் குரலே ஓங்கி ஒலிக்கும் காப்பியம் வகையைச் சார்ந்தது. காப்பியத்தின் வளர்ச்சி என்றோ முடிந்துவிட்டது; நாவல் தொடர்ந்து பரிணாம வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. காப்பியம் காட்டும் உலகநோக்கு ஒருமைப்பட்டதாதலால் அது ஒருவித நடையையும் ஒரே குரலையும் கையாளுகிறது. நாவல் பல குரல்களில் பழ(பல)மொழி நடைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட உலக நோக்கை எடுத்துச் சொல்லலாம். காப்பியப் பாத்திரங்கள் மாறுவதில்லை; நாவலின் பாத்திரங்கள் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இடம் கொடுப்பவை. காப்பியத் தலைமைப் பாத்திரங்கள் உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவை. நாவலின் நாயக, நாயகிகள் சாதாரண மனிதர்கள். காப்பியம் பழங்காலத்தைப் பற்றிப் பேசுவது; நாவல் இன்றைய அறிவு, அனுபவம், வாழ்க்கை முறை பற்றிக் கூறுவது. காப்பியத்தின் வடிவம் விதிகளுக்குட்பட்டது; நாவல் விதிகளுக்குக் கட்டுப்படாத அமைப்புடையது. நாவலின் தொடக்கத்தை நாட்டார் வழக்காற்றில் காணலாம்; அது விழாக்காலப் பாமரப் பண்பாட்டின் (Carnivalesque) விளைவு.

சிலப்பதிகாரம் பக்தின் காப்பியத்திற்கும் நாவலுக்கும் காட்டுகின்ற வேறுபாடுகளை முற்றும்புறக்கணித்துள்ளதை நோக்கும்போது இளங்கோவடிகளின் சாதனையும் அவர் செய்துள்ள புரட்சியும் தெளிவாகும். அவர் காப்பியத்தில் நாட்டார் இலக்கியக் கூறுகளைத் துணிவோடு இணைத்து அதற்கோர் புதிய உருவம் தந்துள்ளார். இதனால் 'உயர்ந்த' இலக்கிய வகை (High Genre) 'தாழ்ந்த' இலக்கிய வகை (Low Genre) என்ற பாகுபாட்டை உடைத்துப் புரட்சிக் காப்பியம் ஒன்றைப்படைத்த பெருமை அவருக்குண்டு. மேலை மொழிகளிலும் வடமொழியிலும் உள்ள பழங்காப்பியங்களின் ஒரு பெருங்குறை அவை. மிக நீண்டு, ஏதேனும் ஒரு வகையான பாவகையை முதலிலிருந்து

முடிவுவரை கையாண்டு, ஆசிரியனின் குரலில் கதையைச் சொல்லிச் செல்வதால் ஒரு தொனி விளைவிக்கும் சோர்வை (Monotony) வாசகர்களுக்கு ஏற்படுத்தும். அவற்றின் கவிதைத் தரமும் சீராக அமையாது ஏற்றத் தாழ்வுகள் பெற்று விளங்கும்; ஆங்காங்கே கவித்துவம் இழந்த உரைநடைப் பகுதிகளையும் காணலாம். ஆங்கிலத்திலுள்ள தலை சிறந்த காப்பியமான மில்டனின் விண்ணுலக இழப்பு (Paradise Lost) இத்தகைய குறையுடையதே. அதனை முதலிலிருந்து முடிவுவரை உற்சாகம் குன்றாமல் யாரால் படிக்க முடியுமென்று டாக்டர் ஜான்சன் கேட்பார். வால்மீகியின் இராமாயணமும், ஹோமரின் காப்பியங்களும், தாந்தேயின் தெய்வீக இன்பியல் நாடகமும் (The Divine Comedy) கூட இதற்கு விதி விலக்குகளல்ல. ஒருவகைப் பாவினத்தில் சந்த, ஓசை வேறுபாடுகளால் ஆர்வக்குறைவை ஓரளவிற்கே ஈடுகட்ட முடியும். ஆனால் இளங்கோவடிகளின் உத்தி சோர்விற்கு இடமில்லாமல் செய்து விடுகிறது. அவர் தமது முப்பது காதைகள் கொண்ட காப்பியத்தில் கையாளும் பாவினங்கள் பல. கதையை ஆற்றொழுக்காகக் கூறிச் செல்ல நிலை மண்டில ஆசிரியப்பாவை இருபது காதைகளில் பயன்படுத்திக் கொண்டு ஏனைய இடங்களில் சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா முதலிய பாவினங்களையும் கானல்வரி, வேட்டுவரி ஆகிய வரிப் பாடல்களையும் குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை ஆகிய குரவைப் பாடல்களையும் கலிவெண்பா, கொச்சகக்கலி, உரைபெறுகட்டுரை, உரைப்பாட்டு மடை ஆகியவற்றையும் தங்கு தடையின்றி இணைத்துக் காப்பியத்தைச் சுவைகுன்றாமல் நடத்திச் செல்கிறார். நெஞ்சையள்ளும் நாட்டார் பாடல்கள் காப்பியம் தரும் முருகியல் இன்பத்தை மிகுவிக்கின்றன. இசைவல்லுநர்கள் சிலப்பதிகாரத்தில் காணும் 22 சுருதிகள், 103 பண்கள் பற்றிச் சிறப்பித்துப் பேசுவர்.

நாட்டார் வழக்காறு சிலம்பின் மங்கல வாழ்த்துப் பாடலில் இருந்து இறுதியிலுள்ள வரந்தரு காதை வரை தனது ஆழமான முத்திரையைப் பதித்திருக்கக் காணலாம். தொன்ம நிகழ்ச்சிகளைக் கூறும் நாட்டுப் பாடல்களும் சிலம்பில் இடம்பெறுகின்றன. அவை மட்டுமல்லாமல் நாட்டுப் புறமக்களின் நம்பிக்கைகளும் ஆசைகளும் இன்ப

துன்பவுணர்வுகளும், அவர்கள் வழிபடும் சிறு தெய்வங்களும் அவர்களது பண்பாட்டைக் காட்டும் பழக்க வழக்கங்களும் உயர்குடும்பத்தார் வாழ்க்கைக்கும் பண்பாட்டிற்கும் அளிக்கப்பெற்றுள்ள பெருமையைப் பெறக் காணலாம். கூத்தும் பாடலும் விரவியுள்ளதால் சிலப்பதிகாரத்தை "அது காவியமும் அன்று, நாடகமும் அன்று; பண்வகுத்துப் பாடவும் எண்வகுத்து ஆடவும் அரங்கில் நிகழ்த்தும் கதை; கதைபாடுவோனால் அரங்கில் பாடப்பெறவும், ஆடுவோனால் கூத்துக்கள் ஆடப்பெறவும், அமைந்த நாடகம் (Opera); அரங்கில் ஆடலும் பாடலும் நிகழக் கூத்தும் கொள்கையும் விளங்கக் குயிலுவக் கருவிகள் சேரப் பாடப்பெறும் கதை" என்றே தமிழ் ஒளி எனும் கவிஞர் எடுத்துக் கொள்வார். சிலப்பதிகாரக் கலை மரபைப் பின்பற்றி எழுந்த சாக்கையார் கூத்தும், கதகளியும், ஓட்டந்துள்ளலும் மலையாள நாட்டில் இன்றும் மக்களை மகிழ்வித்து வருகின்றன என்றும் பதினொரு கூத்துக்கள் எனப்படும் பண்ணின்ற கூத்துக்களின் மரபைச் சார்ந்தது கதகளி, ஒருவர் பாடலும் துள்ளலும் தோன்ற நையாண்டி செய்து நடிப்பது ஓட்டந்துள்ளல் என்றும் விளக்குவார். மலையாளச் சாக்கையார் கூத்தும், தமிழகத் தெருக்கூத்தும் அரங்கினின்றும் கீழிறங்கிய வடிவங்கள் என்பது அவர் முடிவு. தெருக்கூத்தின் வடிவம் உயிர்த்தன்மையற்ற எலும்புக் கூடென்றும் அது கலைத் தன்மையற்றதென்றும் வாதிடும் அவர் சிலம்பை முற்றுமாக இசை நாடகத்தோடு இணைத்துப் பார்க்கிறார். அது இசை நாடகமாக நின்று விடாமல் காப்பியப் பண்புகளும் பெற்று இசை நாடகத்திற்கும் மேலான ஒரு படிநிலையில் இருக்கிறதென்பதைக் காணத் தவறுகிறார்.

"உலக இலக்கியங்களில் நாடக, இசை இலக்கியம் சிலம்பு ஒன்றே" என்று காட்டும் க. அப்பாத்துரை, சிலம்பில் வரும் கானல், வேட்டுவ வரிகள் கிரேக்க நாடகங்களில் வரும் கோரஸ் (Chorus) போன்றவையென்றும் அன்றைய கிரேக்க நாடகம் இன்றைய கதைக் கச்சேரி போன்றதென்றும் சிலம்பும் அத்தகைய அமைப்புடையதே என்றும் பேசுவார். சிலம்பில் உரை – கதை நிரப்பும் பகுதிக்கும், உரைச் செய்யுள் கதைக்கும் நடிகர் உணர்ச்சிக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பது அவர் தரும் விளக்கம். ஆனால் அவர் மலையாளத்தில்

சாக்கையார் கூத்தில் கதைதேய, கலை எஞ்சியுள்ளது என்றும் சிலம்பில் கலைதேய, கதை எஞ்சியுள்ளது என்றும் கூறும்போது இளங்கோ கதையையும் கலையையும் பாமரர் பாடலையும் கூத்தையும் அங்கீகரிக்கப்பட்ட காப்பிய இலக்கிய வகையில் எவ்வாறு இணைத்து வெற்றி பெறுகிறார் என்பதைக் காணத் தவறியமை தெளிவாகிறது.

சிலப்பதிகாரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அலெய்ன் டேனியலூ (Alain Danielou) அதன் காதைகள் ஒவ்வொன்றும் செய்யுளாய் அமைந்த ஒரு நாவலாகும் என்பார். சங்க காலத்துத் தனிச் செய்யுட்களை அகப்பொருள் கோவைபோல் அமைத்துத் தொடர்நிலைச் செய்யுளாய் மாற்றும் முதல் முயற்சியைச் சிலம்பில் காணலாமென்று தெ.பொ.மீ கூறுவது மனங்கொளத்தக்கது. சிலப்பதிகாரம் என்பது சங்க இலக்கிய நோக்கில் முப்பது தனிச் செய்யுள்களே என்பார் தெ.பொ.மீ. அதுமட்டுமின்றி, இவை ஒவ்வொன்றும் தனித்தனிக் கூற்றுகளாகச் சங்கப் பாடல் போல் அமையும் என்றும் விளக்குவார். அரும்பதவுரைகாரர் குன்றக்குரவையைத் தலைமகட்குத் தோழி வரைவு கூறும் கூற்றென்பார். வரந்தருகாதை மட்டும் ஆசிரியர் கூற்றென ஐயமின்றிக் கொள்ளத்தக்கது. பிற காதைகள் கண்டோர் கூற்றாகவோ பிறர் கூற்றாகவோ அமைந்துள இவற்றைப் படலமென்றோ, அத்தியாயமென்றோ கூறமுடியாதபடி அவை தனித்தனிப் பாடல்களாக நின்று, அவ்வத்தனி நிலையில் வேண்டுவனவெல்லாம் விரித்துக் கூறிச் செல்லும் போக்கு உள்ளது. அவையெல்லாம் கதையினை மட்டுமே வற்புறுத்தி வளராமல் கதையைப் பற்றிய குறிப்புகளை ஆங்காங்கே தருகின்றன. தோழி கூற்றாகக் கொள்ளக்கூடிய குன்றக் குரவை குறவர்கள் பாடுகின்ற பாட்டினையெல்லாம் இணைத்துக் கண்ணகி குறவர் நாட்டில் வேங்கை மர நிழலில் நின்றபோது அவளுடைய கணவனோடு வானுலகிற்கு எடுத்துச் செல்லப்பட்டாள் என்ற கதைக் குறிப்பை மட்டும் கொடுக்கிறது. அரங்கேற்று காதை அரசு பற்றியும் இசையாசிரியன் போன்றோரின் நிலையினையும் பரக்கப்பேசி இறுதிப் பன்னிரண்டடிகளில் கதை சொல்லுகிறது. அந்திமாலை சிறப்புச் செய்காதை புகார் நகரத்து மாலை வருணனையாகி, வருந்துவாரில் ஒருத்தியாகக் கண்ணகியையும் களிப்பாரில் ஒருத்தியாக மாதவியையும்

காட்டுகிறது. இந்திரவிழவூர் எடுத்தகாதை, புகார் நகரத்து இந்திர விழாவைப் பாராட்டும் தனிச் செய்யுள். கடலாடு காதை விஞ்சையன் தன் மனைவிக்குப் புகார் நகர அழகைக் காட்டுவதையே முதல் நோக்காகக் கொண்டுள்ளது. அவ்வழகுகளில் ஒன்றாகவே மாதவியின் ஆடல் பேசப்படுகிறது. கானல் வரியில் பெரும்பகுதி கானல் வரிப் பாடல்களே.

சிலப்பதிகாரக் காதைகள் தனித்தனிக் கூற்றுகளாக அமைந்த தனித்தனிச் செய்யுட்களே என்பதை உணரும்போது, இளங்கோவடிகளின் நூல் மணிமேகலை, கம்பராமாயணம், சீவகசிந்தாமணி போன்ற தமிழ்க்காப்பியங்களிலிருந்தும் ஏனைய வடமொழி, மேலை நாட்டுக் காப்பியங்களிலிருந்தும் அமைப்பில் எவ்வாறு வேறுபடுகிறதென்பது தெளிவாகும். காண்டங்கள் மூன்றையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது கூட, தெ.பொ.மீ. கூறுவது போல், கோவலனும் கண்ணகியும் பிரிந்து மீண்டும் கூடுவதோடு முடியும் புகார்க் காண்டம் இன்பியல் நாடகமாகவும், கோவலனின் மரணத்தோடு முடியும் மதுரைக் காண்டம் துன்பியல் நாடகமாகவும், சேரன் செங்குட்டுவனின் வெற்றியைப் பாடும் வஞ்சிக் காண்டம் வரலாற்று நாடகமாகவும் கருதப்படலாம்.

சிலப்பதிகாரத்தின் தலைமைப் பாத்திரங்கள் தெய்வத் தொடர்புடைய அரச குமாரர்களோ கோலோச்சும் மன்னர்களோ அல்ல, குடிமக்களே. முரசு முழங்குதானை மூவரும் பேசப்பட்டாலும் சிலம்பு கூறுவது கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோரின் கதையே. இம்மூன்றும் குற்றங்குறைகள் உடைய சாதாரண மனிதப் பாத்திரங்களே. கண்ணகி இறுதியில் தெய்வநிலை எய்தினாலும் தான் திருமணம் செய்து கொண்டவனின் அன்பைத் தக்க வைத்துக் கொள்ள முடியாதவளாகப் புகார்க் காண்டத்திலும் நீதி தவறிய பாண்டிய மன்னனும் கோப்பெருந்தேவியும் இறந்த பின்னும் மதுரை நகரை எரித்து அழிக்கும் அடங்காச் சினமும் தன் முனைப்பும் கொண்டவளாக மதுரைக் காண்டத்திலும் தோன்றுகிறாள். வணிகர் குடியில் பிறந்த கோவலன் கட்டிய மனைவியைக் கைவிட்டுப் பொன் கொடுத்து வாங்கிய கணிகையோடு வாழ்க்கை நடத்துபவன்; எதிர் விளைவுகளைப் பற்றிச் சிந்தியாது செயல்பட்டுப் பின்னால் வருந்தும் சாதாரண மனிதன்;

கேளிக்கைகளில் நாட்டம் கொண்டு குன்றன்ன செல்வத்தைத் தொலைப்பவன். பரத்தையர் குலத்தைச் சார்ந்த மாதவி ஏற்கனவே மணமான ஒருவனிடம் பொன்பெற்று அவனோடு வாழத் துணிபவள். இவர்கள் மூவரும் தொடக்கத்தில் தவறுகள் செய்தவர்களாயிருந்து, துன்ப அனுபவங்கள் காரணமாக மாற்றமும் மனவளர்ச்சியும் பெற்று இறுதியில் தம் நிலையில் உயர்கிறார்கள். இவர்கள் பக்தின் காட்டும் காப்பியப் பாத்திரங்களிலிருந்து முற்றும் வேறுபட்டவர்கள்; பின்னால் வந்த மேலை நாவல்களின் தலைமைக் கதைமாந்தர்களை ஒத்தவர்கள்.

பிற காப்பியங்களில் வரும் வியத்தகு ஆற்றல் கொண்ட எதிர் நிலைத் தலைவனும் (Villain) இங்கு இல்லை. திருட்டுக் குற்றம் செய்து கோவலன் கொலைக்குக் காரணமாகும் பொற்கொல்லன் அந்நிலைக்கு உயர்த்தப்படவில்லை. மற்றைய காப்பியங்களெல்லாம் ஆண்பாத்திரங்களின் வீரத்தையும் பெண் பாத்திரங்களின் காதலையும் போற்றுவன. சிலம்பில் புகார்க் காண்டத்திலும் மதுரைக் காண்டத்திலும் அவலச் சுவை ஆட்சி செலுத்த, வஞ்சிக் காண்டத்தில் மருட்கைச் சுவை மேலோங்கியிருக்கிறது.

சிலம்பின் தொடக்கத்திலேயே இளங்கோ அடிகள் வடமொழிக் காப்பிய மரபுகளைப் புறக்கணித்துச் செய்யும் புரட்சி தொடங்குகிறது. முதல் காதை காப்பியத் தலைவனின் பிறப்பைப் பற்றிப் பேசவில்லை. பலர் கூடி ஆடிப்பாடும் இசைப்பாடல் மங்கல வாழ்த்துப் பாடலாகிக் கண்ணகி கோவலன் திருமணமும் திருமண வாழ்த்தும் முதலில் இடம் பெறுகின்றன. கடவுளுக்குப் பதிலாகத் திங்களும், ஞாயிறும், மாமழையும், பூம்புகாரும் போற்றப்படும் பாடல்களில் திங்களுக்குச் சோழனின் குளிர் வெண் குடையும், கதிரவனுக்குக் காவிரிநாடனின் திகிரியும் மாமழைக்கு அவனளியும் உவமைகளாகி, இயற்கையைப் போற்றும் பாடல்கள் உண்மையில் மனிதனைச் சிறப்பிக்கின்றன. இக்காதை, முதலில் ஊர்சொல்லிப் பின்னர் மணமகள் பெயரும் மணமகன் பெயரும் கூறி, இவர்களுக்கு இருமுதுகுரவர் மணவணி காண முடிவு செய்திருப்பதாக மாநகரத்திற்கு மணவினை அறிவிக்கும் திருமண அழைப்புப் போல் அமைந்துள்ளது. இளமகளிர் பலர்

இணைந்து, ஆடிக்கொண்டே கண்ணகி கோவலன் ஆகியோரை வாழ்த்தும் காட்சி நாட்டியக் காட்சிபோல் அமைந்து அவர்கள் பாடும் அரச வாழ்த்துடன் காதை முடிவுறுகிறது. காப்பியங்களில் காணும் கடவுள் வாழ்த்தும் புலவரின் அவையடக்கமும் எங்கும் காணோம்.

மூன்றாம் காதையான அரங்கேற்று காதை இரண்டாம் காதையோடு பொருள் தொடர்பு உடையது அன்று. கடைசி ஐந்து வரிகளில் மட்டும் கதை தொடர்கிறது. இக்காதையில் மாதவி அறிமுகப்படுத்தப்படுகிறாள். ஆடலாசிரியன், இசையாசிரியன், நன்னூற் புலவன், தண்ணுமை முதல்வன், யாழாசிரியன் ஆகியோர் இலக்கணமும், அரங்கின் அமைதியும் அமைப்பும், தலைக்கோலின் சிறப்பும், மாதவியின் நாட்டியமும் வருணிக்கப்படுகின்றன. அந்திமாலை சிறப்புச் செய்காதையின் அமைப்பும் தனித்தன்மை கொண்டது. இங்கு மாலை வருணனை ஒரு காதையாக விரிகிறது. மாலைப் பொழுதில் துணைவரைப் பிரிந்து மகளிர் துன்பம் எய்தலும் காதலர்ப் புணர்ந்தோர் களிப்பு அடைதலும் அதன் பாடுபொருள். ஒப்பனை துறந்த ஓவியமாகிய கண்ணகி முன்னவரில் ஒருத்தியாகவும் கலவியும் புலவியும் காதலனுக்கு அளிக்கும் மாதவி பின்னவரில் ஒருத்தியாகவும் காட்டப்படுகின்றனர். இந்திரவிழவூரெடுத்த காதையில் வரும் புகார் வருணனை பிறகாப்பியங்கள் கூறும் வளநகர் வருணனைகளிலிருந்து மிகவும் வேறுபடுகிறது. அவையெல்லாம் கற்பனை நகரையே காட்டும்; இங்கு நாம் காணும் நகரம் யதார்த்தமானது; அப்படி ஒன்று இருந்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கக்கூடியது. கடலாடு காதையில் ஒரு விஞ்சை வீரன் வருகை, அவன் இந்திரவிழா நிகழ்ச்சிகளைக் காதலிக்குக் காட்டல், மாதவியின் பதினோருவகை ஆடல்கள், கோவலன் ஊடற்கோலம், அதனால் மாதவி கொண்ட கோலம், இருவரும் கடலாடச் செல்லல், கடற்காட்சிகள் ஆகியவை இடம் பெறுகின்றன. இக்காதை நிகழ்ச்சிகள் பல புராண நிகழ்ச்சிகளை ஒத்தவை. சிலம்பில் வரும் இத்தகைய கூறுகளை மனத்திற்கொண்டு தான் நச்சினார்க்கினியர் அதனைத் தொன்மைக்கு ஒரு சான்றாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

வேட்டுவ வரியில் கதைக்குப் பெரும்பங்கு இல்லை. பாலை நில எயினர்களின் கொற்றவை வழிபாடு, கொற்றவைக் கோலம், வழிபாட்டுமுறை, நம்பிக்கை, எயினர் வாழ்க்கை ஆகியவையே சிறப்பிடம் பெறுகின்றன. ஊர்காண் காதையில் வரும் மதுரை நகர அமைப்பும், மதுரை நகர மக்கள் வாழ்க்கை பற்றிய குறிப்புகளும் மிகை இல்லாமல் உண்மையான நிழற்பட வருணனைகளாகவே தோன்றுகின்றன. ஆய்ச்சியர் குரவையில் மாதரி முதலான ஆயர்குலப் பெண்கள் குரவைக் கூத்து ஆடியமை இடம் பெறும். காமமும் வெற்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கையிணைத்தாடுவது குரவைக் கூத்து ஆகும். குன்றக் குரவையில் கோவலனுடன் விண்ணுலகு சென்ற கண்ணகியைக் குலதெய்வமாகக் கருதி குறமகளிர் குரவைக் கூத்தாடுதலையும் குன்றவர்தம் தெய்வ வழிபாட்டு முறைகளையும் அகப்பொருள் சுவையுடைய பாடல்களையும் காணலாம். வாழ்த்துக் காதையில் வஞ்சி மகளிர் கண்ணகி தெய்வத்தைப் பாடியும் மூவேந்தரை வாழ்த்தியும் சிறப்புச் செய்கின்றனர். சோழனை அம்மானைப் பாடலாலும், பாண்டியனைக் கந்துகவரியாலும், சோழனை ஊசல் வரியாலும், மூவேந்தரை வள்ளைப் பாட்டாலும் அப்பெண்கள் வாழ்த்துகின்றனர்.

கதையை நடத்திச் செல்லும் காதைகளோடு சமுதாயத்தின் கீழ்த்தட்டிலிருப்போரின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்ட நாட்டார் இலக்கிய வகைகளைத் தக்கவாறு இளங்கோ பயன்படுத்திக் கொள்கிறார். காப்பியக் கூறுகளோடு பிற இலக்கிய வகைகளோடு தொடர்புடையவற்றையும் சேர்க்கிறார். சங்க இலக்கிய மரபைப் பேணுவதோடு புரட்சிகரமான மாறுதல்களையும் புகுத்துகிறார். வேட்டுவ வரியில் பாலை நில வருணனையும், நாடுகாண் காதையில் மருத நில வருணனையும், கானல் வரியில் நெய்தல் நில வருணனையும் குன்றக் குரவையில் குறிஞ்சி நில வருணனையும் ஆய்ச்சியர் குரவையில் முல்லை நில வருணனையும் தந்து புகார், மதுரை, வஞ்சி ஆகிய மூன்று தலைநகர்களையும் பலகோணங்களில் காட்டுகிறார். மூன்று காண்டங்களிலும் முடியுடைவேந்தர் மூவரின் “அறனும், மறனும், ஆற்றலும் அவர்தம் பழவிறல் மூதூர்ப்பண்பு மேம்படுதலும், விழவுமலி

சிறப்பும், விண்ணவர் வரவும், ஒடியா இன்பத்து அவர் உறைநாட்டுக் குடியும், கூழின் பெருக்கமும்" பற்றிப் பேசுவதோடல்லாமல் புகார்க்காண்டத்தில் "தெய்வக் காவிரித் தீது தீர்சிறப்பும், பொய்யாவானம் புதுப்புனல் பொழிதலும்" மதுரைக்காண்டத்தில் "வையைப் பேரியாறு வளம் சுரந்து ஊட்டலும் பொய்யாவானம் புதுப்பெயல் பொழிதலும்" வஞ்சிக் காண்டத்தில் "வரியும் குரவையும் விரவிய கொள்கையின் புறத்துறை மருங்கின் அறத்தொடு பொருந்திய மறத்துறை முடித்த வாய்வாள் தானையின்" வெற்றிகள் பற்றியும் பேசுகிறார். கானல் வரி குன்றக் குரவைகளில் அகப்பொருள் துறைஅமைந்த பாடல்களும் வேட்டுவ வரியிலும் காட்சிக் காதையிலும் வெட்சி, வஞ்சி, காஞ்சி எனும் புறத்திணைப் பகுதிகளும் விரவி வரக் காணலாம்.

சிலம்பின் பல காதைகள் மேலே குறித்தவாறு தன்னிறைவு கொண்டவையாயும் விளங்குகின்றன. இதனைப் பிறகாப்பியங்களில் காண இயலாது. மணிமேகலை பற்றிய வரலாற்றினை நீர்ப்படை காதையில் மாடலன் செங்குட்டுவனிடம் கூறி இருப்பினும் வரந்தரு காதையில் சேர மன்னன் தேவந்திகையிடம் மணிமேகலை யார்? அவள் துறவு பூண்டதன் காரணம் என்ன? என்று வினவி விடையும் பெறக் காண்கிறோம். துறவியாகிய மாடலன் மணிமேகலையின் அழகையும் இளமையையும் சுட்டிக் கேட்போர் நெஞ்சில் இரக்கவுணர்வைத் தூண்டுகிறார். இதுபோல் தேவந்திகையின் வரலாறும் வரந்தரு காதையிலும் கனாத்திறம் உரைத்த காதையிலும் பேசப்படுகின்றது.

காப்பியம் இன்றைய மனித வாழ்க்கையில் இருந்து வெகு தொலைவில் தள்ளி நின்று விட நாளும் மாறுகின்ற உருவமும் உள்ளடக்கமும் கொண்ட நாவல் தற்கால வாழ்க்கையோடு தன்னை இரண்டற இணைத்துக் கொண்டுள்ளதென்று கூறும் பக்தினின் கருத்தைப் பொய்ப்பிக்கும் வகையில் இளங்கோ தம் காப்பியத்தில் காப்பியக் கூறுகளோடு 'பாமர' இலக்கிய வகைகளின் கூறுகளையும் முருகியல் இன்பம் மிகும் வகையில் சேர்த்துச் செய்துள்ள முயற்சி வியப்புக்குரியது. மேலை இலக்கியங்கள் பலவற்றில் ஆழங்கால் பட்டவரான பக்தினுக்குக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே சிலம்பைப்

போன்ற ஒரு புரட்சிக்காப்பியம் தோன்றியிருந்தது என்பது தெரிந்திருக்க வழியில்லை. அவர் அது பற்றி அறிந்திருந்தால் டாஸ்டாவெஸ்கியின் நாவல்களைப் போன்று இளங்கோவின் காப்பியத்தையும் உச்சி மீது வைத்துக் கொண்டாடி இருப்பார் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக, இந்திர விழா ஊரெடுத்த காதை, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகியவையும் அறம், பொருள், இன்பம் போன்ற உறுதிப் பொருள்கள் பற்றிப் பேசும் இளங்கோ அதே முறையில் தாம் பாடும் ஊர்களின் "விழவு மலி சிறப்பு" பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதும் பக்தினுக்குப் பெரு மகிழ்வு அளித்திருக்கும்.

கல்வி

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்

உவர்நிலத்தில் தோன்றிய உப்பே எனினும் அதன் பயனை உணர்ந்த பெரியோர் நன்செய் நிலத்தில் தோன்றிய நெல்லினும் சிறந்ததாகக் கொள்வர். அதுபோல் தாழ்ந்த குடியிற் பிறந்தவரே எனினும் கற்றறிந்த பெரியவர்கள் உயர்குடியிற் பறந்தவர்களாகக் கொண்டு சிறப்புச் செய்யப் பெறுவர்.

தொல்காப்பியரின் திணைப் பகுப்பும் அமைப்பும்

பேராசிரியர் மு. மணிவேல்
மேனாள் புலத் தலைவர்,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.
கைபேசி : 98655 34622

'திணை' என்பது தொல்காப்பியர் பயன்படுத்தியிருக்கும் பழஞ்சொல். சொல் வகைகளைக் குறிக்குமிடத்தும், மக்களின் ஒழுக்கங்களைக் குறிக்குமிடத்தும் பலவிடங்களில், அதிகமாகக் குறித்திருக்கும் சொல். சொல்லதிகாரத்தின் கிளவியாக்கத்திலும் பெயரியலிலும் சொல் வகைப் பாகுபாடு கூறும் போது 'திணை' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். மக்கள் நுதலியது உயர்திணைச் சொல், மக்கள் அல்லாத பிறவற்றை நுதலுவது அஃறிணைச் சொல் என்று கூறும் தொல்காப்பியர், உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுத்திணைப் பெயர் எனச் சொல் அமைப்பு பற்றி விரித்துச் சொல்லியிருக்கிறார். இது பற்றி இக்கட்டுரை இங்கு பேசவில்லை. தொல்காப்பியர் அக, புற ஒழுக்கங்களைப் பாகுபடுத்தி விளக்கி இலக்கணம் கூறும் நிலையில் திணை, திணை வகைகள், திணைப்பொருள்கள் பற்றிக் கூறும் செய்திகள், திணைகளைப் பொருளதிகாரத்தில் கூறும் முறையில் காணலாகும் அமைப்பு முறை பற்றி இக்கட்டுரை உணர்த்துகிறது.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தினை அகத்திணையியல் புறத்திணையியல் எனப் பகுத்து முதற்கண் அகம், புறம் - திணைகள் எனப் பகுப்புச் செய்கிறார். பின்னர் அகமாகிய காதல் - களவு, கற்பு - ஒழுக்கம் சார்ந்த நிகழ்வுகளை ஏழு திணைகளாகப் பகுக்கிறார்; புறமாகிய காதல் சார்பில்லாத பிறவற்றை - வீரம், வெற்றி, அழிவு, புகழ் - சார்ந்தவற்றை ஏழு திணைகளாகப் பகுத்திருந்தார். பொருளதிகாரத்தில் குறித்திருக்கும் திணை எனும் சொல் ஒழுக்கப் பொருண்மையைச் சுட்டுகிறது. நச்சினார்க்கினியர் திணை எனும் சொல் 'ஒழுக்கம்' என்னும் பொருண்மை உடையதென்றும் இளம்பூரணர் பொருள் - முதல் கரு உரி

என்பனவற்றைச் சுட்டும் வகையில் 'பொருள்' என்னும் பொருண்மை உடையதென்றும் தத்தம் உரைகளில் உணர்த்துகின்றனர்.

அகத்திணை - அகவொழுக்கம் - காதல் நிகழ்வு (களவு, கற்பு) உள்ளம் (அகம்) சார்ந்தமைவது - தலைவன் (ஆண்) தலைவி (பெண்) இருவரின் உள்ளங்கள் இணைந்த புணர்ந்த ஒழுக்கம் நிலம் சார்ந்து, நிலப் பொருள் சார்ந்து, கால நிகழ்வு சார்ந்து நிகழ்வது.

தொல்காப்பியர் அகத்திணை - அகவொழுக்கம் ஏழு (7) என அகத்திணையியலின் முதல் நூற்பாவில் கூறி, அவை பற்றிய செய்திகளைத் தொடர்ந்துவரும் நூற்பாக்களில் கூறுகின்றார்.

"கைக்கிளை முதலாய் **பெருந்திணை** இறுவாய்

முற்படக் கிளந்த **எழுதிணை என்ப**" (தொல்.அகம்.1)

அகத்திணைகள் ஏழு எனக் கூறும் தொல்காப்பியர் ஏழு திணைகளையும் பெயர் சுட்டிக் கூறவில்லை. முதல் திணையாகக் கைக்கிளையையும் இறுதித் திணையாகப் பெருந்திணையையும் குறிப்பிடும் அவர் இடைநின்ற ஐந்திணைகள் எவை எனக் கூறவில்லை. அடுத்த நூற்பாவான.

"**நடுவண் ஐந்திணை நடுவணது** ஒழிய

படுதிரை வையம் பாத்திய பண்பே" (தொல்.அகம்.2)

இந்நூற்பாவிலும் நடுநின்ற ஐந்து திணைகளின் பெயர் சுட்டவில்லை. நடுநின்ற ஐந்திலும் நடுநின்ற திணைக்கு நிலம் இல்லை என்பது மட்டும் சுட்டப்படுகின்றது. அந்தத்திணையும் இன்னதெனக் கூறப்படவில்லை. நடுவணது ஒழிய நின்ற நான்கனுக்குரிய நிலத்தை முறையே காடுறை உலகம், மைவரை உலகம் தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் எனச் சுட்டி இறுதியில் அவை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனக் குறிப்பிடுகின்றார். மேற்குறித்த நூற்பாக்களின் அடிப்படையில் தொல்காப்பியர் சுட்டும் ஏழு திணைகளில் ஆறு திணைகளின் பெயர்கள் மட்டும் அறியச் செய்யப்பட்டுள்ளன. இடைநின்ற ஒன்று குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் இடையில் இருத்தல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கூற்று வழியில் அறியத்தக்கதாகும். அத்திணையின் பெயர் பாலை

என்பது, புறத்திணையியலில் தொல்காப்பியர் அகத்திணைகளுக்கு இணையாக ஏழு புறத்திணைகளைக் குறிப்பிட்டு அவற்றை ஒழுக்க நிகழிடச் சார்பு நிலையில் இயைபு செய்யும் பொழுது 'காஞ்சி' எனும் புறத் திணைக்குப் பாலைத்திணையைக் குறிப்பிடுகின்றார். ஆதலின் அகத்திணையியலில் 'நடுவண் ஐந்திணை நடுவணது' எனக் குறித்தது பாலை எனும் அகத்திணை என அறியலாம். அகத்திணையியலில் எங்கும் 'பாலை' என்ற திணைச் சொல்லைத் தொல்காப்பியர் சுட்டவில்லை என்பது சுட்டத்தக்கதாகும்.

ஏழு அகத்திணைகளில் ஏழாவதாகக் குறித்த பெருந்திணையில் திணை என்ற சொல்லமைவு உள்ளது கருதத்தக்கது. ஆதலின் திணை என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருள் என அறியலாம், பெருந்திணை எனச் சுட்டியது போலக் கைக்கிளைத்திணை, குறிஞ்சித் திணை, முல்லைத் திணை, மருதத் திணை, நெய்தல் திணை எனப் பெயர் சுட்டவில்லை. சுட்டாமைக்குக் காரணம் என்பது, ஒழுக்கம், ஒழுக்க நிகழ்விடம், ஒழுக்க நிகழ்காலம், ஒழுக்கம் நிகழ்வதற்குரிய சூழல் பொருள்கள் என்பனவற்றையெல்லாம் குறிப்பது அறிதற்குரியதாகும்.

திணைக்குரிய முதற்பொருளாக நிலத்தையும் பொழுதையும் கூறும் தொல்காப்பியர் நான்கு நிலம் கூறும் போது பாலையைக் குறிக்காத அவர் பொழுது பற்றிக்கூறும் போதும் பாலை எனச் சுட்டிக் கூறாமல் நடுவண் திணைக்கு நண்பகல், வேனில் எனச் சுட்டிக் கூறுகின்றார். பொழுது பற்றிக் கூறும் போது தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை (நடுவணது) என்ற வரிசையில் கூறுவதும் காணத்தக்கதாகும்.

தொல்காப்பியர் ஐந்திணைகளுக்குரிய உரிப்பொருள்களைச் சுட்டும் போது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்றிவ்வாறு மட்டும் கூறி இவ்வுரிப் பொருள்களுக்குரிய திணைகளைச் சுட்டவில்லை. அதாவது இத்திணைக்கு இது உரிப்பொருள் என இயைபுபடக் கூறவில்லை. ஆயின் உரைகாரர்களும் பின்னைய இலக்கண நூலாரும் கூறியிருப்பதன் வழி புணர்தல் – குறிஞ்சி, பிரிதல் – பாலை, இருத்தல் – முல்லை, இரங்கல் – நெய்தல், ஊடல் – மருதம் என உணர்த்தப்பட்டுள்ளது.

மேற்குறித்தவற்றின் அடிப்படையில் தொல்காப்பியர் அகத்திணைகளை வரிசைப்படச் சுட்டுவது காட்டத்தக்கதாகும். திணைகளை மொத்தமாகக் குறிக்கையில் கைக்கிளை ஐந்திணை – பெருந்திணை என்ற முறைமையும்; நிலம் பற்றிக் குறிக்கையில் முல்லை, குறிஞ்சி (பாலை), மருதம், நெய்தல் என்ற முறைமையும்; பொழுது பற்றிக் குறிக்கையில் முல்லை, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற முறைமையும் காணப்படுகின்றது. இம்முறைமைகளைத் தனித்துப் பின்வருமாறு காட்டலாம். கைக்கிளை முதலாவது, பெருந்திணை இறுதி நீங்க.

1. முல்லை – குறிஞ்சி, (பாலை) – மருதம் – நெய்தல்

2. முல்லை – குறிஞ்சி – மருதம் – நெய்தல் – பாலை

3. குறிஞ்சி – பாலை – முல்லை – நெய்தல் – மருதம்

இவை வேறுபட்டதான அமைவுகளைப் பெற்றிருப்பது அறியத்தக்கதாகும்.

அகத்திணைகளில் நடுநின்ற ஐந்திணைகளுக்கு முதல், கரு, உரிப்பொருள்களைக் குறிப்பிடும் தொல்காப்பியர், கைக்கிளை, பெருந்திணைகளுக்கு உரிப்பொருள் மட்டும் சுட்டுகிறார். கைக்கிளையை அகத்திணைகளுக்கு முதலாகச் சொன்னாலும் ஐந்திணைகளுக்கு உரியவற்றைக் குறித்த பின்னரே அதற்குரிய உரிப்பொருள் கூறுகிறார். இந்நிலையிலும் கைக்கிளை உரிப்பொருள் சுட்டுதலில் ஆறாவதாகக் கூறப்படுதல் அறியலாம்.

தொல்காப்பியர் புறத்திணையியலில் புறத்திணைகளுக்கு இயைபாக அகத்திணைகளைக் கூறும் போது அமையும் திணையமைப்பு வரிசைமுறையும் காட்டத்தக்கதாகும். ஏழு புறத்திணைகளை அவர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற வரிசையில் குறிப்பிடுகின்றார். போர் ஒழுக்க நிகழ்வின் வரிசை முறையில் இம்முறை அமைந்ததாகும்; வெட்சி – நிறை கவர்தல், வஞ்சி – மண் வேண்டிப் போரிடல், உழிஞை – மதில் முற்றல்

போர், உழிஞை – ஆற்றல் காட்டல், வாகை – வெற்றி, காஞ்சி – நிலையாமை, பாடாண் – புகழ்ச்சி, பரவல் இவற்றிற்கு அகத்திணைகளின் இயைபாகக் காட்டுதல் வருமாறு: வெட்சி – குறிஞ்சி, வஞ்சி – முல்லை, உழிஞை – மருதம், தும்பை – நெய்தல், வாகை – பாலை, காஞ்சி – பெருந்திணை, பாடாண் – கைக்கிளை இவ் இயைபிற்கு உரைகாரர்களும், திறனாய்வாளர்களும் விளக்கங்கள் தந்துள்ளனர். எவ்வாறாயினும் புறத்திணையியலில் கூறப்பெற்றுள்ள அகத்திணைகளின் வரிசை முறை,

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என்றவாறு அமையப் பெற்றுள்ளது. முன்னர் காட்டிய அகத்திணையியலில் கூறப்பெற்றுள்ள திணை அமைவுகளின் வரிசை முறையினின்று இது வேறாக உள்ளதும் அறியத்தக்கதாகும். புறத்திணைகளின் வரிசைமுறை புறவொழுக்க நிகழ்வின் வரிசை முறையில் அமைய அகத்திணைகளின் வரிசை முறை அங்ஙனம் அமையவில்லை; கூறப்பெறவில்லை.

தொல்காப்பியர் அவருக்கு முன்னிருந்த இலக்கண நூல்கள் (அகத்தியம் முதலியன) கூறியுள்ளதைப் பலவிடங்களில் எடுத்து மொழிபவர். அகத்திணை, புறத்திணை – எழுதிணைப் பகுப்பும் முன்னோர் மொழிந்தது என்பதாகக் குறித்திருக்கிறார் (எழுதிணை என்ப) முன்னோர் குறித்த வரிசை முறை எது என்பதும் காட்டப்படவில்லை.

தொல்காப்பியர் திணையாகக் கூறும் கைக்கிளையைப் பாடாண்திணையில் ஒரு துறையாகக் கூறுகிறார். செய்யுளியலில் கைக்கிளைப் பொருண்மைப்பாட்டிற்குப் பாவியல் மருட்பாவில் அமையும் என்கிறார் என்பதும் சுட்டத்தக்கதாகும்.

தொல்காப்பிய நூற்பாச் செய்திகளின் அடிப்படையில் அகத்திணைகளின் அமைவில் – உரிப்பொருள் நிகழ்வுத் தொடர்ச்சியில் – புறவொழுக்கங்களை வரிசைபடக் கூறியது போல வரிசை முறை காட்டின்;

புணர்தல்	–	குறிஞ்சி
இருத்தல்	–	முல்லை
பிரிதல்	–	பாலை
ஊடல்	–	மருதம்
இரங்கல்	–	நெய்தல்

என்றவாறு வரிசைமுறை காட்டலாம். நிலவியல் அடிப்படையில் காட்டினாலும் :

மலை	–	குறிஞ்சி
காடு	–	முல்லை
மலையும் + காடும்	–	பாலை
வயல்	–	மருதம்
கடல் / பெருமணல்	–	நெய்தல்

என்றவாறு அமையும். நிலவியலில் மலை – காடு – இரண்டும் கலந்தது, வயல், கடல் என்ற வகையில் மேலிருந்து கீழாக அமையப்பெற்றுள்ளதைக் கண்கூடாகக் காணலாம். ஆதலின் உரிப்பொருள் நிகழ்வின் அடிப்படையில் தொல்காப்பியர் கூறும் நடுநின்ற ஐந்து அகத்திணைகளைக் குறிஞ்சி → முல்லை → பாலை → மருதம் → நெய்தல் என்றவாறு அமையப் பெறுமாறு கொள்ளலாம்; நிலவியல் அமைப்பிலும் முறை இயைபுடையதாகும். மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் கைக்கிளை களவின் முன் நிகழ்வு (குறுங்கரு) என்பார்; பெருந்திணையைக் கற்பின் பின் நிகழ்வு (முதிர்ந்த வீழ்கரு) என்பார். ஆதலின் கைக்கிளையை முற்குறித்த ஐந்திணைகளின் முன்னும், பெருந்திணையைப் பின்னும் – நிகழ்வு அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் அழகியல்

பேராசிரியர். **ம. திருமலை,**
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
கைபேசி : 9442158802

அழகியல் என்ற தமிழ்ச் சொல்லுக்குரிய ஆங்கிலச் சொல் “Aesthetics” என்பதாகும். இச்சொல் கிரேக்க மொழியில் காணப்பட்ட “Aisthetikos” என்ற வேர்ச் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டதாகும். இச்சொல்லுக்கு உணரும் திறன், புலனுணர் திறன் என்ற பொருள்களும் உண்டு. அலெக்சாண்டர் பாம் கார்ட்டன் என்ற 18–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானிய தத்துவமேதை இச்சொல்லை முதன்முதலில் பயன்படுத்தினார்; “Aeisthetiko” என்பது அவர் அழகியல் குறித்து எழுதிய நூல் எனினும் அலெக்சாண்டர் பாம் கார்ட்டன் காலத்திற்கு முன்னரே அழகியல் எனும் கருத்தியலானது தத்துவம், கலை இலக்கியத் துறைகளில் பயன்பாட்டில் இருந்து வந்தது. கிரேக்கச் சிந்தனையாளரான சாக்ரடீஸ் அழகு குறித்துத் தம் மாணவர்களிடேயே வினாக்கள் எழுப்பினார் என்று தத்துவ வரலாறு கூறுகிறது. கி.மு.4,5ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிளேட்டோ தனது “சிம்போசியம்” என்னும் நூலில் ஒழுங்கும் (Order) அமைப்பும் (Structure) அழகுக்கு அடிப்படை என்ற கருத்தினை விளக்கினார். கிரேக்கச் சிந்தனையாளர் மூவருள் மூன்றாமவரான அரிஸ்டாட்டில் (கி.மு. நான்காம் நூற்றாண்டில்) அழகின் பயன் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகும். மகிழ்ச்சி உணர்வை ஏற்படுத்தும் ஒரு சொல், எழுத்து, ஒலி முதலியவற்றைக் கொண்டுள்ள படைப்பு அழகின் வெளிப்பாடு என்ற செய்தியை எடுத்துக்கூறினார்.

சொற்கள் :

தமிழ் இலக்கியப் புனைவுகளில் காணப்படும் ஒலிக்குறிப்புச் சொற்கள், அசைகளின் அமைப்பு, சீர்கள் முதலியவை ஒரு கவிதையில் இடம் பெற்றுள்ள பாங்கு அழகின் வெளிப்பாடுகள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

செவ்வியல் இலக்கியங்களில் இடம் பெறும் அளபெடைகள் கூட அழகுணர்ச்சியைத் தூண்டுபவை.

"எலாஅ மடப்பிடியே எங்கூடற் கோமான்
புலாஅல் நெடுவேல் மாறன் – உலாஅங்கால்
பைய நடக்கவும் தேற்றாயால் நின்பெண்மை
ஐயப் படுவ துடைத்து"

என்ற முத்தொள்ளாயிரப் பாடலில் "எலா அ, புலாஅல், உலா அ" ஆகிய இசைநிறை அளபெடைகள் யாப்பமைதியுடன் பொருட் சிறப்பும் கொண்டவை என்பதை ரசிகமணி டி.கே.சி. விளக்குகிறார். பெண் யானையின் நடையைக் குறிக்கும் இப்பாடலில், ஓசை நயம் மென்மையாகவும் மெதுவான நடையோட்டமும் அளபெடைகளால் குறிக்கப்படுகின்றன.

கம்பர் இராமனின் அழகினைச் சிறப்பித்துக் கூறுமிடத்தில், "ஐயோ! இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்" என்று கூறுவதில் இடம் பெறும் "ஐயோ" என்ற சொல் அழகுணர்ச்சியைத் தூண்டவல்லதாகும். எனவே கருத்துக்களைப் புலப்படுத்தி, அனுபவங்களை உருவாக்கும் கடமை இலக்கியத்திற்கு இருப்பதைப் போல அழகிய முறையில் கூறி, மகிழ்ச்சியைத் தூண்டும் கடமையும் உண்டு. தமிழ் இலக்கிய வரலாற்றின் நெடுகிலும் இதனை ஒரு தமிழ் வாசகனால் உணரவியலும்.

காட்சிப்படுத்துதல் :

பதினெட்டாம் நூற்றாண்டுச் சிந்தனையாளரான இம்மானுவேல் காண்ட் (Immanuel kant) அழகியல் குறித்த மிக முக்கியமான கருத்தினைக் கூறுகிறார். எழுத்துப் படைப்பானது.ஒரு செய்தியைக் காட்சிப்படுத்திக் கூறுவதன் மூலம் மக்கள் மனத்தில் எழுப்பும் உணர்வே அழகு என்பதாகும் என்பது **இம்மானுவேல் காண்ட்டின்** கருத்தாகும். மேலும் **அறிவிற்கும் கற்பனைக்கும் உகந்த வகையில் கூறப்படும் செய்தியே அழகுடையது என்ற கருத்தினையும் காண்ட் என்ற அறிஞர்** கூறுகிறார். தமிழ் இலக்கியங்களில் தற்குறிப்பேற்ற அணியாக அமைந்திருக்கும் பாடல்களில் அறிவு, கற்பனை இரண்டுக்கும் உகந்த வகையில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் இங்கு நினைவிற் கொள்ளத்தக்கன. சிலப்பதிகாரக் காப்பியத்தில், கோவலனும்

கண்ணகியும் மதுரை நகரை நோக்கி வரும்போது மதுரையில் கட்டப்பட்டிருந்த பல்வேறு கொடிகள், அசைந்தாடுகின்றன. அக்காட்சியை இளங்கோவடிகள், கோவலனும் கண்ணகியும் மதுரை நகருக்குள் வரவேண்டாம் என்று கொடிகள் குறிப்பாகப் புலப்படுத்துவதைப் போன்று தோன்றுகின்றது என்று கூறுகின்றார். இது ஒரு நிகழ்வைக் காட்சிப்படுத்தும் உத்திமுறைதான்!. "வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட" என்பது இளங்கோவடிகளின் கூற்று. இதில் காட்சிப்படுத்துகின்ற அழகியல் உத்தி இடம் பெற்றிருப்பதை உணரலாம். இந்த வருணனைப் பகுதியின் மூலம் வாசகன் மனத்தில் ஏதோ ஒரு வகை ஐயப்பாடு, அச்சம் முதலிய உணர்வுகளை இளங்கோவடிகள் தோற்றுவித்து விடுகின்றார். இது மிகச் சிறந்த அழகியல் புனைவு முறையாகும்.

சிலப்பதிகாரத்தில் பிறிதோர் இடத்திலும் இதே போல் ஒரு காட்சி புனையப்பட்டுள்ளது. வைகையாற்றில் கரைபுரண்டோடும் தண்ணீரின் மீது மலர்கள் உதிர்ந்து தண்ணீரை மறைத்துக் கொண்டிருக்கின்றன; அதாவது எண்ணிறந்த மலர்களால் மூடப்பெற்று வைகையாறு ஓடிக் கொண்டிருப்பது மேலிருந்து காண்பவர்களுக்குத் தெரியவில்லை. அதாவது வைகையாறு தண்ணீரை மலர்களால் மறைத்துக் கொண்டு ஓடிக் கொண்டே இருக்கிறது. இதனைக் காண்பவர்களுக்கு, மதுரையில் கண்ணகி, கோவலனுக்கு ஏற்படவிருக்கும் துன்பத்தினை முன்னுணர்ந்த வைகை தன் கண்ணீரை மறைத்துக் கொண்டு ஓடுவதைப் போலத் தோன்றுகிறது என்று இளங்கோவடிகள் கூறுகின்றார். இளங்கோவடிகள்,

"உலகு புரந்து ஊட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி"

என்று கூறுகின்றார். இவ்வருணனைப் பகுதி அழகியலில் காட்சிப்படுத்தும் உத்திக்குத் தக்க சான்றாகும்.

உணர்ச்சியுடன் தொடர்புடையது அழகியல் :

அழகியல் பற்றிக் கூறும் முனைவர் ந.பிச்சமுத்து, "இயற்கைத் தோற்றம் அல்லது கலையில் உள்ள அழகைக் கண்டு அனுபவிக்கும் உணர்ச்சி சம்பந்தமானது" என்று இலக்கிய இயக்கங்கள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார். மேலே சிலப்பதிகாரக் காப்பியத்திலிருந்து எடுத்துக்காட்டி விளக்கப்பட்ட செய்திகளை இக்கருத்துடன் பொருத்திக் காணலாம்.

சொற்களின் இன்றியமையாமை :

கவிதைக் கலையின் அழகியலில் சொற்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. சொற்களினால் ஆன கவிதையை ஒரு கவிஞன் படைக்கும்போதும் அதனைப் பிறிதொருவன் வாசிக்கும் போதும் இருவரும் தங்கள் உணர்வுகளைப் பரிமாற்றம் செய்து கொள்கிறார்கள் என்று பொருள்முதல்வாதிகள் கூறுகின்றனர். எனினும் இலக்கியம் அழகியலின் உயிர்நாடி என்று கருதுபவர்கள், உணர்வுப் பரிமாற்றமானது புறஉலக அனுபவங்களால் தூண்டப்படுவதில்லை; அது கவிதைக்கு உள்ளேயே இருந்து பிறக்கிறது என்று உறுதிபடக் கூறுகின்றனர்.

ஓசை நயமும் கற்பனையும் :

அழகியலில் இலக்கியத்தின் ஓசை நயமும் கற்பனை சார்ந்த பொருள் நயமும் முக்கியத்துவம் பெறுகின்றன என்பது திறனாய்வாளர்கள் கருத்து. இக்கட்டுரையின் பிற்பகுதியில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் இவ்வகையில் விளக்கப்பட விருக்கின்றன.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் :

"ஓதாமல் உணர்ந்தான் என்று உருத குணத்தினர் எல்லாம்

பாதார விந்தத்தில் பணிந்து அவன் சொற்பணி செய்தார்"

என்று வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் குமரகுருபர அடிகளைப் பற்றித் தனது புலவர் புராணத்தில் கூறுகிறார். இது மிகைப்படுத்தப்படாத இயல்பான கூற்று ஆகும். குமர குருபரர் கருவிலே அருளுடையவர்!

பிறக்கும்போதே அருள் கூட்ட, நல்லிளமையில் தமிழறிவும் தெய்வ பக்தியும் வாய்ந்த பல்கலையும் அறிந்து தவ வழிபாடு செய்து ஞானாசிரியர் உபதேசம் பெற்றார். புலமையாற் பெற்ற பெருமையோடு தவவொழுக்கத்தாற் பெற்ற பெருமையும் சேர்ந்து "பொன்மலர் நாற்றமுடைத்து என்பது போல இவருடைய சிறப்பை மிகுதியாக்கியது" என்று தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் கூறுகிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இருளில் ஒளி காட்ட, வழிகாட்டத் தோன்றிய பெருவிளக்கு குமரகுருபரர் என்று கூறினால் அது மிகையல்ல. தமிழின் சிறப்புக்களை இந்திய நாடு முழுமைக்கும் சென்று பரப்பியவர் என்ற பெருமை குமரகுருபரருக்கு உண்டு! இத்தனை சிறப்பு வாய்ந்த அருட்கவி குமரகுருபரர் பாடிய தனி நலம் மிகுந்த படைப்பு "மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்" ஆகும். ஒரு பாடலில் சொற்சுவை இருக்கும்; ஆனால் பொருட்சுவை குன்றிக் காணப்படும். சில பாடல்களில் பொருட் சுவை சிறப்பாக இருக்கும்; ஆனால் வாசகரைச் சுண்டி ஈர்க்கும் சொற்சுவை இராது. இது பெரும்பான்மை மரபு! ஆனால் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் சொற்சுவையும் பொருட்சுவையும் ஒருசேர அமைந்து அழகியல் புனைவுக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது.

மதுரையை ஆண்டு வந்த திருமலை நாயக்கரின் அவையில் தங்கியிருந்த காலத்தில் குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை அருளினார் என்றும் இதனால் மனமுவந்த மீனாட்சியம்மை, கோயில்பூசாரியின் மகள் வடிவில் தோன்றி ஒரு முத்துமாலையினைக் குமரகுருபரரின் கழுத்தில் அணிவித்தாள் என்றும் கதைகள் வழங்குகின்றன. இத்தகைய புனைவுகள், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் சிறப்புக்களைக் கட்டமைக்கத் தோன்றியவை என்பது எளிதில் புரியக் கூடியது தான்.

பிள்ளைத்தமிழ் இலக்கிய வகை :

தமிழ் இலக்கிய வரலாற்றில் இறைவன், மன்னன், கொடை வள்ளல்கள், சிறுநிலத் தலைவர்கள், பெரும் பேராசான்கள் போன்றவர்களின் பெருமைகளை நேரடியாகப் புனைந்து பாடாமல்,

அவர்களைக் குழந்தைகளாக உருவகம் செய்து கொண்டு பாடுவது ஒரு மரபு ஆகும். தொல்காப்பியர் காலந்தொட்டே இம்மரபு உண்டு; இதனையே பிள்ளைத்தமிழ் என்று குறிப்பிடுவர். தமிழில் பிள்ளைத்தமிழ் தனிச்சிற்றிலக்கிய வகையாகப் பரிணமித்திருக்கிறது.

தமிழில் காணப்படும் பல்வேறு இலக்கிய வகைகளுள் பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வகைக்கு மட்டும் தான் “தமிழ்” என்ற பின்னொட்டு (Suffix) இணைத்துக் கூறப்பட்டுள்ளது. ஏனைய உலா, கலம்பகம், தூது, பரணி, குறவஞ்சி, பள்ளு போன்ற இலக்கிய வகைகளின் பெயர்களுடன் தமிழ் என்ற பின்னொட்டு இடம்பெறவில்லை என்ற தகவலும் இங்கு எண்ணத்தக்கது. இது “பிள்ளைத்தமிழ்” இலக்கிய வகையின் சிறப்பை எடுத்துக் காட்டுவதாகும்.

குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்ற நூலைப் பொருத்தவரை “பிள்ளைத் தமிழ் என்பதற்கு இரண்டு விளக்கங்கள் கூறலாம். ஒன்று பிள்ளையைப் பற்றிய(குழந்தையைப் பற்றிய) தமிழ் என்பது. பிறிதொன்று பிள்ளையால் (குமரகுருபரரால்) பாடப்பட்டது என்பதாகும்” இவ்விரு பொருள்களுமே சிறப்பானவை! தொல்காப்பியம், “குழவி மருங்கினும் கிளவதாகும்” என்ற நூற்பாவின் வழி பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வகைக்குத் தோற்றுவாய் செய்கிறது.

பிள்ளைத் தமிழ் என்ற இலக்கிய வரிகளுக்கு ஏனைய வற்றுக்கில்லாத பிறிதொரு சிறப்பும் உண்டு ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்ற பகுப்பு முறை தான் அச்சிறப்பாகும். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், காப்பு, செங்கீரை, தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப்பருவம், வருகைப் பருவம், அம்மானைப்பருவம் அம்புலிப் பருவம், நீராடற்பருவம், ஊசற்பருவம் என்ற பத்துப் பருவங்களைக் கொண்டதாக அமைகிறது. கற்பனை, உணர்ச்சி, சொல்வளம், அணிநலன்கள் முதலியவை சிறந்திருக்கும் பாடல்களைக் கொண்டதாக “மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்” அமைந்திருக்கிறது.

வடிவழகு பூத்த சுந்தரவல்லி, கருத்துக்களின் ஒழுங்கு முறை :

ஒரு காட்சியைக் காணக்கூடியவரின் மனநிலையைப் பொருத்து அவருக்கு மனமகிழ்வு ஏற்படும்; இது உலகில் காணக்கூடிய பேருண்மையாகும். நல்ல இசை ஒருவரின் மனத்தை நெகிழச்செய்யும்! அழகிய ஓவியத்தைக் கண்ணுற்றதும் ஒருவர் மனம் மகிழ்வார்! பழைய நண்பனைக் கண்டதும் ஒருவர் மனம் உருவார்! இயற்கையின் எழிற் கோலம் ஒருவரை மனம் மகிழச்செய்யும்! இவ்வாறு ஒவ்வொருக்கும் ஒரு பொருள் மகிழ்ச்சியைத் தரும்; ஆனால் அனைவர் மனத்தையும் மகிழச் செய்யும் நூதனமான ஒரு பொருள் உலகில் உண்டு! அது எது? அது தான் மழலைச் செல்வம்! ஒரு குழந்தை "தவழ்வதை," தளர் நடையிடுவதை, மழலைப் பேச்சுப் பேசுவதைச் சுவைக்காத மனிதர் உலகில் இல்லை! ஒவ்வொரு மனிதனுக்கும் அவரது குழந்தையின் செயல்கள் காவியச் சுவைக்கு நிகரான, மேம்பட்ட சுவையைத் தரவல்லன.

குமரகுருபரர் ஒரு தாயின் மனநிலையில் நின்று, அன்னை மீனாட்சி ஒரு குழந்தையாக மாறி, ஊஞ்சல் ஆடுவதை மனக் கண்களில் கற்பனை செய்து சுவைக்கிறார். இப்போது பாடலைக் காணலாம்.

இருபதமும் மென்குரல் கிண்கிணியும் முறையிட்டு
இரைத்திடும் அரிச் சிலம்பும்
இறும் இறும் மருங்கு என்று இரங்கு மேகலையும் பொன்
எழுது செம்பட்டு வீக்கும்
திருவிடையும் உடைதாரமும் ஒட்டியாணமும்
செங்கைப் பசுங்கிள்ளையும்
திருமுலைத் தரள உத்தரியமும் மாங்கலத்
திரு நாணும் அழகு ஒழுக நின்று
அருள் பொழியும் மதிமுகமும் முகமதியின் நெடு நிலவு
அரும்பு குறுநகையும் ஞான
ஆனந்த மாக்கடல் குடைந்து குழைமகரத்தொடு
அமராடும் ஓடரிக்கண்

பொருகயலும் வடிவழகு பூத்த சுந்தரவல்லி
பொன்னூசல் ஆடியருளே!

புழுகு நெய்ச் சொக்கர் திரு அழகினுக்கு ஒத்த கொடி பொன்னூசல் ஆடியருளே

– ஊசற்பருவம், பா.10.

பருவ வயதில் நிறைந்து தோன்றும் தன் மகள் ஊசல் ஆடும் காட்சியைக் கண்டு மனம் நெகிழும் தாய் ஒருத்தியின் மனநிலையில் நின்று குமரகுருபரர் இப்பாடலை அமைத்திருக்கிறார். மீனாட்சியம்மை தன்னிரு கால்களிலும் கிண் கிணி, சிலம்பு என்ற இரண்டு அணிகலன்களையும் அணிந்திருக்கிறாள். கிண்கிணியாகிய சதங்கை மென்மையான ஒலியை எழுப்புகிறது; பரல்களை உள்ளடக்கிய சிலம்பு உரத்து ஒலிப்பது. இரண்டும் முறை வைத்து, ஒன்றன் பின் ஒன்றாக ஒலிக்கின்றன. மீனாட்சியம்மையின் இடையில் திகழும் மேகலை எனும் அணி, அம்மையின் நுண்ணிய இடை முறிந்துவிடுவதைப் போலத் தோன்றுகிறதே என்று ஏங்குகிறதாம் "இறும் இறும் மருங்கில் என்று இரங்கும் மேகலை" என்று குமரகுருபரர் கூறுகிறார். அன்னையானவள் பொன்சரிகை அமைந்த செம்பட்டு உடையை அணிந்திருக்கிறாள்; அத்துடன் மேலாடை, மங்கல அணி, என்றின்ன பல அணிகள் பூண்டு "அழகு ஒழுக நின்று ஊசலாடுகிறாள்" என்று குமரகுருபரர் கற்பனை செய்து மகிழ்கிறார்.

அன்னை மீனாட்சியின் முகத்தில் இயற்கையாகவே அருளுணர்வு ததும்பி வழிகிறது. முகமாகிய நிலவில் சிறுநகை துளிர்த்துக் கொண்டிருக்கிறது. ஞான ஆனந்த மாக்கடல் – அதாவது அறிவு மகிழ்ச்சி என்ற கடலில் – திளைத்து விளையாடும் மகரக் குழைகளை அன்னை அணிந்திருக்கிறாள். செயற்கையாகப் புனையப்பட்ட இக்குழைகள், கயல் மீன்கள் போன்ற உண்மையான கண்களுடன் போரிடுகின்றன. இத்தகைய முழுமையான அழகுடைய கொடி போன்ற சாயலுடைய அன்னையே பொன்னூசல் ஆடுவாயாக! சொக்கநாதரின் அழகுக்கு இணையான அழகினையுடைய அன்னை மீனாட்சியே ஊஞ்சல் ஆடுவாயாக! என்று ஒரு தாய் வேண்டிக் கொள்வது போன்ற பாவனையில் குமரகுருபரர் மனமுருகி வேண்டுகிறார். இப்பாடலை ஊன்றிக் கவனித்தால் ஒருண்மை புலப்படும்! ஒரு தாய் தன் மகளைப் பார்க்கும் போது, வியப்பும் மகிழ்ச்சியும் மேலிடப் பாதம் முதல் தலை வரை பாதாதிகேசமாகவும் கண்டு அணு அணுவாக ரசித்து

மகிழ்வாள்; தலை முதல் கால் வரை கேசாதி பாதமாகவும் கண்டு மகிழ்வாள்.

மேற்காட்டப்பட்ட பாடலில் தாய் தன் மகளைப் பாதம் தொட்டு உச்சி வரை பார்த்து ரசிப்பது புலனாகிறது. மீனாட்சி பாதம் முதல் உச்சி வரை அணிந்திருக்கும் அணிகலன்களையும் தாய் காண்கிறாள்; இதனால் மகள் திருமணமாகிச் சென்ற ஊரில் செல்வ வளம் மிகுந்திருப்பதால் ஒரு அணிகலன் போதுமென்று தோன்றுகிற இடத்தில் இரண்டு அணிகளை அணிந்திருக்கிறாள்; கால்களில் சிலம்பு அல்லது சதங்கை ஒன்று அணிந்தாலே போதும்; ஆனால் மீனாட்சியம்மை கிண்கிணி, சிலம்பு என்ற இரண்டினையும் அணிந்திருக்கிறாள்; எனவே மகளின் புகுந்த வீடும் ஊரும் செல்வ வளத்தில் சிறந்திருக்கின்றன என்று தாய் உணர்ந்து கொள்வதாகக் குமரகுருபரர் அமைத்துப் பாடுகின்றார். மிகவும் நுட்பமாகச் சிந்தித்துக் காணவேண்டிய பகுதி இதுவாகும்.

பெண்கள் பல்வேறு விதமான செயற்கை அணிகளை அணிந்திருந்தாலும் இயற்கை அணிகலனான புன்னகை முகத்தில் மலர்ந்திருப்பதே சிறப்பு, வாழும் சூழலில் மகிழ்ச்சி நிலவினால் தான் முகத்தில் புன்னகை மலரும். மீனாட்சியம்மை செயற்கை அணிகலன்களுடன் இயற்கையான அணிகலனான புன்னகையையும் முகத்தில் அணிந்திருக்கிறாள். இதனை “நெடு நிலவு அரும்பு குறுநகை” என்று குமரகுருபர அடிகள் குறிக்கிறார். எனவே மீனாட்சியம்மை வாழும் நாடும் நகரமும் செழித்துத் திகழ்கின்றன; அவளது இல்லறமும் மகிழ்ச்சியுடன் திகழ்கின்றது என்ற செய்திகளைக் “குறுநகை” என்ற ஒற்றைச் சொல்லினால் பெற வைக்கிறார் குமரகுருபர சுவாமிகள். குறிப்பிட்ட சில சொற்களைக் கூறுவதன் மூலம் சில காட்சிகளைப் புனைவது சிறந்த அழகியல் புனைவு உத்தியாகும்.

தன் மகள் செல்வ வளத்தில் வாழ்வதுடன் நிற்கிறாளா? அல்லது அறிவு நலமும் கொண்டு தன் குடும்பத்தினைப் பேணுகிறாளா என்று அறியத் தாய் ஆர்வம் காட்டுகிறாள். மீனாட்சியம்மை அறிவுடன் திகழ்ந்து இல்லறத்தினை நடத்துகின்றாள் என்பதைத் தாயானவள், மீனாட்சியம்மையின் முகத்தில் நிலவும் அறிவொளியினால் உணர்ந்து கொள்கிறாள். இதனை “ஞான ஆனந்த மாக்கடல்” என்ற தொடரினால் குமரகுருபர அடிகள் சுட்டுகிறார்.

ஒரு பெண் திருமணத்திற்கு முன்னர் பெற்றிருந்த பண்பு நலன்கள் திருமணத்திற்குப் பின்னரும் தொடர்ந்து அவளிடம் காணப்படுதே சிறப்பான நிலையாகும். பிறந்த வீட்டில் அதிக அன்பும் அருளும் கொண்டு திகழ்ந்த ஒரு பெண், புகுந்த வீட்டின் சூழல்களால் மாறிவிடுவதும் உண்டு! ஆனால் மீனாட்சியம்மையின் நல்ல இயல்புகள் திருமணத்திற்குப் பின்னர் மாறிவிடவில்லை; மாறாக மிகுந்திருக்கின்றன என்பதைத் தாய் உணர்வதாகக் குமரகுருபரர் காட்டுகின்றார். "அருள்பொழியும்" என்ற தொடரில் இக்கருத்து கூறப்படுகின்றது.

ஒரு பெண் அவளுடைய பெற்றோரின் அன்பில் திளைத்து வாழும் காலத்தில் அதிக எழில் கொண்டவளாக இருப்பாள்; கவலைகள், பொறுப்புக்கள் இல்லாத வாழ்வு நிலை அவளுடைய எழிலைப் பன்மடங்கு மிளிரச் செய்யும். திருமணத்திற்குப் பின்னர் அப்பெண்ணின் புகுந்த வீட்டிலும் அவளுடைய வாழ்க்கை மகிழ்வுடன் அமையுமானால், அவளுடைய எழில் தோற்றம் மிகும்! மாறாக இருப்பின் அப்பெண் எழில் குன்றிக் காணப்படுவாள். திருமணமாகிச் சென்ற ஒரு பெண்ணை அவள் தாய் மீண்டும் காணும் போது இவற்றையெல்லாம் கவனித்து நோக்குவாள்; அது அவளது இயல்பு! மீனாட்சியம்மையின் தாய், தன் மகளின் அழகு எவ்வாறு உள்ளது என்பதை உற்று நோக்குகிறாள். மீனாட்சியம்மனின் அழகு பன்மடங்கு மிகுந்திருக்கிறது. எனவே புகுந்த வீட்டில் அவள் அன்பு நிறை சூழலில் வாழ்கிறாள் என்பதைத் தாய் மனத்தினுள் உணர்கிறாள். "வடிவழகு பூத்த சுந்தரவல்லி பொன்னூசல் ஆடி அருளே! புழுகு நெய்ச் சொக்கர் திருவடிகளுக்கு ஒத்த கொடி பொன்னூசல் ஆடியருளே!" என்ற அடிகளில் இக்கருத்து உணர்த்தப்படுகின்றது.

இப்பாடலைப் பொருத்தவரை குமரகுருபர அடிகள் ஒரு தாயின் உடலுக்குள் கூடு விட்டுக் கூடு பாய்ந்து உணர்வுகளைப் பொழிகிறார். மேலே காட்டப்பட்ட செய்திகள் ஒரு அருட்கவிஞரின் கூற்றுக்களே அல்லவென்றும் ஒரு தாயின் கூற்றே என்றும் தோன்றும்படியாகக் குமரகுருபரர் படைத்திருப்பது பெரும் சிறப்பாகும். பாடலில் பயின்று வரும் கிண்கிணி, சலங்கை, அருள் உணர்வு, இரண்டு அணிகளை அணிந்திருத்தல், புன்னகை, எழில் தோற்றம், அறிவொளி முதலியவற்றை ஆழ்ந்து நோக்காமல், மேலோட்டமாகப் படித்துச் சென்றால், அவற்றின் நயங்களும் உளவியல் நுட்பங்களும் புலப்படா; அவற்றை ஆழ்ந்து சிந்தித்து மனத்திற்குள் அசை போட்டும் நடைமுறை

அனுபவங்கள், உணர்வுகள் முதலியவற்றுடன் இணைத்தும் கண்டுணர்ந்தால் மட்டுமே பாடலின் சிறப்புக்கள் புலனாகும்.

இம்மானுவேல் காண்ட் (Immanuel kant) கருத்து :

இலக்கியத்தில் அழகியல் அணுகுமுறை பற்றிப் பேசும் இம்மானுவேல் காண்ட் என்ற ஜெர்மானியத் தத்துவவேதை "வாழ்க்கை என்பது அனைவரும் ஒரே மாதிரியாக ருசிக்கத்தகுந்த பண்டமல்ல; அனைவருக்கும் தனித்தனி அனுபவங்களும் ரசனைகளும் விருப்பு வெறுப்புக்களும் உண்டு. பலருக்கும் ஒத்த உணர்வுகள் ஏற்பட வழி உண்டெனினும் அவை நீடிக்கும் தன்மையுடையனவல்ல; இங்ஙனமான வாழ்வில் தனிப்பட்ட ஒருவரால் அளிக்கப்பெறும் படைப்பு, பலராலும் விரும்பப்படும் ஒன்றாகவும் அல்லது வெறுக்கப்படும் ஒன்றாகவும் கருத வழியுண்டு" என்று கூறுகிறார். இது மிகவும் சிறந்த கருத்து! எந்த உணர்வு நிலையில் கவிஞன் ஒரு பாடலைப் புனைந்தானோ, அத்தகைய உணர்வு நிலையை வாசகனும் மனத்தளவில் பெற்றால்தான் கவிதையின் அழகினை, சுவையை வாசகன் அடைய இயலும், இதனை டி.கே.சி. "சஹ்ருதய பாவம்" என்று கூறுகிறார். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் மேற்காட்டப்பட்ட பாடலை நுகர வேண்டுமாயின் ஒருவர் ஒரு தாயின் மன நிலையைப் பெற வேண்டும்.

வாசக ரசனையும் கற்பனையும் :

கவிதையை ரசிக்கத் தூண்டுவது அதில் இடம் பெற்றுள்ள அழகு சார்ந்த பகுதியாகும். மேற்காட்டப்பட்ட பாடலில் கிண்கிணி, சதங்கை ஆகியவற்றின் ஓசைகள், மகரக் குழைகள், இயற்கைக் கண்கள், சிறு நகை முதலான செய்திகள் அழகியல் சார்ந்தவை. இவை கற்பனையான புனைவுகள் தாம்! ஆனால் இவை வாசகனுக்குச் சுவையை ஏற்படுத்துகின்றன என்பதை மறுக்கவியலாது. உண்மையில் இவ்வருணனைப் பகுதிகள் கவிதையில் இடம் பெறாவிட்டால் இது கவிதையாகத் தோற்றமளிக்காது என்று கூறலாம்.

எளிமை: அழகியலின் அடிப்படை :

அழகியலின் பிறிதொரு முக்கியமான கூறு எளிமைப் பண்பாகும். ஒரு கவிதையைப் படித்தவுடனே வாசகன் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு கவிதை எளிமையாக இருந்தால் கவிதை இன்பம் மிகும். அழகியலின் இன்றியமையாத கூறுகளுள் எளிமைப்

பண்பும் ஒன்றாகும். எளிமை என்பதைச் சொல் நிலையில் புரிந்து கொள்ள வேண்டும்; எளிய சொற்கள், சிந்திக்கச் சிந்திக்க ஆழ்ந்த விரிவான பொருள் தோன்றுவது என்பது அழகியலின் கூறுகளுள் ஒன்று. மேலே காட்டப்பட்ட மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்ப் பாடலில் எளிமைக் கூறுகள் நிறைந்திருக்கின்றன. எனவே இதனை ஒரு வாசகனால் சுவைக்கவும் கவிஞனின் உள்ளத்து உணர்வுடன் ஒன்றவும் முடிகின்றது. பக்திக் கவிதை என்ற தனி நிலைத் தகுதியிலிருந்து, அனைவராலும் உணரத்தக்க பொதுவான உணர்வுக் கவிதை என்ற நிலையை இப்பாடல் பெறுகிறது. இது குமரகுருபரரின் கவிதைப் புனைவுத் திறனுக்குத் தக்க சான்றாகிறது.

மனப்பதிவும் அழகியலும் :

அழகியல் கவிதைக்கு மனப்பதிவு மிகவும் இன்றியமையாதது ஆகும். சொற்களால் கட்டமைக்கப்படும் கவிதையானது வாசகன் உள்ளத்தில் காட்சி வடிவத்தில் மீண்டும் ஒரு முறை உருவாகிறது. அதாவது சொற்களால் உருவான கலை (Verbel Art) அந்த நிலையைக் கடந்து காட்சிவடிவக் கலையாக Visnal Art) மீண்டும் வாசகன் மனத்தில் பிறக்கிறது. இது அழகியல் கவிதையின் பிரதான அம்சமாகும். ஒரு பாடலைச் சான்றாகப் பார்த்து விட்டு மீண்டும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழுக்குள் செல்லலாம். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் “அழகின் சிரிப்பு” தொகுப்பிலுள்ள ஒரு கவிதையைக் காண்க.

“ஊருக்குக் கிழக்கே உள்ள பெருங்கடல் ஓரமெல்லாம்
கீரியின் உடல் வண்ணம் போல் மணல் மெத்தை அம்மெத்தைமேல்
நேரிடும் அலையோ கல்வி நிலையத்தின் இளைஞர் போல
பூரிப்பால் ஏறும் வீழும்; புரண்டிடும் பாராய் தம்பி”

பாவேந்தரின் இப்பாடலை அதிகம் விளக்கத் தேவையில்லை! எளிய சொற்கள்! எளிய வருணனை! இதில் காட்சிப்படுத்தும் உத்தி சிறப்பாக உள்ளது. மணற்பரப்பு, அதன் மென்மையான குறுமணல், அதில் காணப்படும் மேடு, பள்ளங்கள் முதலியவை பாவேந்தருக்குக் கீரியின் உடலமைப்பை நினைவூட்டுகின்றன. இதனால் “கீரியின் உடல் வண்ணம் போல் மணல் மெத்தை” என்று கூறி விடுகின்றார். இது கடற்கரையின் மணற் பகுதியை வாசகனுக்குக் காட்சிப் படுத்தி விடுகிறது. புனைவியற் காலக் கவிஞர்களிடையே (Romantic Poets) பரவலாகக் காணக்கிடைக்கும்

இப்பண்பு காலத்தால் முற்பட்டவரான குமரகுருபரரிடமும் காணக் கிடைக்கிறது.

காட்சிப்படுத்தும் உத்தி; மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் :

காட்சிப்படுத்தும் படிமங்கள் மலிந்த பாடல்கள் பல மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் உண்டு. பலரால் அடிக்கடி எடுத்துக் காட்டப்படும் ஒரு பாடலைக் காணலாம்.

"தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே! நறை பழுத்த துறைத்
தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே
அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே! வளர்சிமைய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே! மதுகரம் வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இள
வஞ்சிக் கொடியே வருகவே!
மலையத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக! வருகவே!"

– வருகைப்பருவம், பா.9

இப்பாடல் சைவப் பெருமக்களால் பன்முறை ஓதப்படும் சிறப்பிற்குரியது. இதில் அழகியற் கூறுகள் எங்ஙனம் பொதிந்திருக்கின்றன என்பதைக் காணலாம். இப்பாடலின் திரண்ட கருத்து வருமாறு "தொடுக்கப்பட்ட, பழமையான" கடவுட்தன்மை கொண்ட பாடல்களின் பயனாகவும் பல்வேறு துறைகள் செழித்து வளர்ந்திருக்கின்ற தமிழின் சுவையாகவும் மீனாட்சியம்மை திகழ்கின்றாள்.

மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கின்ற ஆணவம் என்ற கிழங்கைத் தோண்டியெடுத்து வெளியே எறிந்த உயர்ந்த அடியவரின்

மனத்தில் ஏற்றப்படும் ஒளிவிளக்காகத் திகழ்கின்றாள் அன்னை. இமயமலைச் சாரலில் கவலையின்றி விளையாடித்திரியும் பெண் யானையைப் போன்றவளாகவும் அன்னை திகழ்கின்றாள்.

அலைகள் ஓயாது வீசிக் கொண்டிருக்கும் கடலை ஆடையாகக் கொண்டிருக்கும் இந்த பூவுலகத்தைக் கடந்து நிற்கின்றவன் இறைவன். அவன் தனது உள்ளத்தில் அழகுச் சித்திரமாக எழுதி வைத்துக் கொண்டு எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கும் உயிர் பெற்ற ஓவியம் போன்றவள் அம்மை.

வண்டுகள் சூழ்ந்து மொய்த்துக் கொண்டிருக்கும் காடு போல் செழித்த கூந்தல் நிறைந்தவள் மீனாட்சி அம்மை! கூந்தலாகிய காட்டினைத் தாங்கி நிற்கும் வஞ்சிக் கொடி போன்றவள் மீனாட்சியம்மை. மலையத்துவசபாண்டியன் என்ற மன்னனுக்குக் கிடைத்த பெருவாழ்வே போன்றவள் தாய், – இதுவே இப்பாடலின் திரண்ட பொருளாகும். கவிதையின் பயன், தமிழின் சுவை, அகந்தைக் கிழங்கு, ஒளி விளக்கு, இமயமலைப் பகுதியில் விளையாடும் இளம் பெண்யானை, கடலை ஆடையாக அணிந்த இவ்வுலகம், அந்த உலகத்தைக் கடந்து நிற்கும் இறைவன், இறைவனின் உள்ளத்தில் நிலையாக நிற்கும் எழில் ஓவியம், கூந்தலாகிய காட்டினைச் சுமந்து நிற்கும் வஞ்சிக்கொடி போன்ற அனைத்து உருவகங்களும் படிமங்கள் தாம். கண்களால் கண்டு அறிவினால் அறியவியலாத இறைவியை வாசகனின் மனக்கண்களில் காட்சிப்படுத்திக் காட்டுவதற்குப் புலவர் மேற்கொள்ளும் முயற்சியே இத்தனை படிமங்கள்.

இவற்றுள் அன்னை மீனாட்சியைக் கவிதையின் பயன் – அதாவது "தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே" என்று கூறுவது இதுவரை எப்புலவருக்கும் தோன்றாத, புதியதாக ஆக்கப்பட்ட படிமம் (created or private image) ஆகும்; இது குமரகுருபரருக்கே உரியது. கவிதையின் பயனைக் காட்ட முடியாது; உணரத்தான் முடியும்! அதைப் போன்றே அம்மையின் அருளைக் காட்ட முடியாது; உணர மட்டுமே முடியும்! இதனை நுண்பொருட் படிமம் என்றும் கூறலாம்.

...... தொடர்ச்சி அடுத்த இதழில்

சங்கச் செய்திகள்

20.06.2019 அன்று பிற்பகல் 2 மணியளவில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக மு.வ அரங்கில் கொண்டாடிய சர்வதேச யோகா தினத்தில் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் 20 பேர் பங்கேற்றனர்.

21.06.2019 அன்று காலை 6 மணியளவில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, மதுரைக் கல்லூரியில் பிரம்மாகுமாரிகள் சபை சார்பாக நடைபெற்ற உலக அமைதிக்காக கூட்டு யோகா நிகழ்ச்சியில் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் 15 பேர் பங்கேற்றனர்.

21.06.2019 அன்று முற்பகல் 10 மணியளவில் "கற்றல் கற்பித்தல்" என்ற பொருண்மையில் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. சிங்கப்பூரிலிருந்து வருகை புரிந்த தமிழாசிரியர்கள் முனைவர் கோ.சித்ரா வாசுதேவன், திரு.செ.வாசுதேவன், திருமதி மலர்விழி பெருமாள் ஆகியோர் சிறப்புரையாற்றினர். துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் வரவேற்புரையும், உதவிப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

21.06.2019 அன்று பிற்பகல் 2 மணியளவில் செந்தமிழ்க் கல்லூரியில் நாட்டுநலப்பணித்திட்டத்தின் சார்பாக சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. முதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரி யோகா ஆசிரியர் திரு.பொ.ரா.செந்தில்முருகன் அவர்கள் மாணவர்களுக்கு யோகாவின் நன்மைகள் குறித்து சிறப்புரையாற்றினார். மாணவர்கள் மூச்சுப் பயிற்சி மற்றும் ஆசனங்கள் பயிற்சி செய்தனர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

24.06.2019 அன்று பிற்பகல் 2 மணியளவில் சங்கத்தின் சார்பாக மாணவர்களுக்கான தன்னம்பிக்கையூட்டும் சொற்பொழிவு நடைபெற்றது. சங்க செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். செந்தமிழ்க் கல்லூரி மேனாள் மாணவர் சங்கச் செயலாளர் புலவர் வை.சங்கரலிங்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். உத்திரப்பிரதேசம் சுல்தான்பூர் மாவட்ட ஆட்சியர் சி.இந்துமதி., இ.ஆ.ப., அவர்கள் மாணவர்களுக்கான தன்னம்பிக்கையூட்டும் உரையாற்றினார். அவர் தமது உரையில், "தன்னம்பிக்கை, உழைப்பு, விடாமுயற்சி இருந்தால் வெற்றி உறுதி. தற்போதைய நிலையில் தொழில்நுட்பப் புரட்சி மக்களின் இயல்பு வாழ்க்கை, முன்னேற்றத்திற்குப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

ஆண், பெண் சமநிலை வேண்டும்" எனக் குறிப்பிட்டார். கல்லூரி முதல்வர் வரவேற்புரையும், துணைமுதல்வர் நன்றியுரையும் வழங்கினர். நிகழ்ச்சிக்குப் பின்னர் சி.இந்துமதி., இ.ஆ.ப., அவர்கள் தமிழ்ச் சங்க நூலகத்தைப் பார்வையிட்டார். மதுரை ஜெயபிரபா ஜுவல்லர்ஸ் உரிமையாளர் திரு.கே.வி.கே.ஆர்.பிராபாகரன் அவர்கள் திருமறைசரிகம்' எனும் ஓலைச் சுவடியைப் பாண்டியன் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்.

26.06.2019 அன்று பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக போதை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. மது அருந்துவோர் மறுவாழ்வு மையம் அமென்ஸ் பவுண்டேசன் நிறுவனத்தின் ஆலோசகர்கள் திரு.பா.நல்லதம்பி, த.தங்கச்செல்வி, அ.மேரிசுகந்தி ஆகியோர் கருத்துரை வழங்கினர். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி மற்றும் முனைவர் பா.நேருஜி இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

27.06.2019 அன்று முற்பகல் 10.30 மணியளவில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு விழா கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. கல்லூரிச் செயலாளர் திருமிகு இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் வாழ்த்துரை வழங்கினர். மதுரை மாவட்ட சம்பளக் கணக்கு அலுவலர் முனைவர் க.ச.முத்துப்பாண்டியன் அவர்கள் முதலாம் ஆண்டு வகுப்புக்களைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் வரவேற்புரையும், துணைமுதல்வர் நன்றியுரையும் நல்கினர்.

28.06.2019 அன்று முற்பகல் புலவர் மு.சன்னாசி அவர்கள் எழுதிய "திருவாசகத்தில் வாழ்வியல் ஆலோசனைகள்" நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் தலைமை வகித்தார். டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக மேனாள் ஆட்சிப்பேரவை உறுப்பினர் திரு.பிரான்சிஸ் பாண்டியன் அவர்கள் நூலை வெளியிட, மதுரை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் மருத்துவர் ஜெ.சங்குமணி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக துணை இயக்குநர் முனைவர் இரா.பாஸ்கரன், ஸ்ரீ ஜெயப்பிரபா ஜுவல்லர்ஸ் உரிமையாளர் திரு.கே.வி.கே.ஆர்.பிராபாகரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மணிமேகலை பிரசுரத்தின் நிர்வாக இயக்குநர் முனைவர் ரவி தமிழ்வாணன் அவர்களுக்கு பதிப்புச்சிகரம்' விருது வழங்கப்பட்டது. "திருவாசகத்தில் வாழ்வியல் ஆலோசனைகள்" – நூலினை கல்லூரி துணைமுதல்வர் முனைவர் கோ.சுப்புலெட்சுமி அவர்கள் திறனாய்வு செய்தார். மேனாள் மாணவர் சங்கத் தலைவர் மு.இளங்கோவன் அவர்கள் வரவேற்புரையும் சங்கச் செயலர் புலவர் வை.சங்கரலிங்கம் அவர்கள் நன்றியுரையும் நல்கினார்.

ஆகஸ்ட் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

கவிஞரேறு வாணிதாசன்
(ஆகஸ்ட் 7)

நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை
(ஆகஸ்ட்24)

வ. சு. செங்கல்வராய பிள்ளை
(ஆகஸ்ட் 25)

தெ. பொ. மீனாட்சி சுந்தரம்
(ஆகஸ்ட் 27)



அ. ச. ஞானசம்பந்தனார்
(ஆகஸ்ட் 27)



தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்
(ஆகஸ்ட்.31)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **தி.முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

செந்தமிழ்க் கல்லூரி

நான்காம் தமிழ்ச்சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் கி.வேணுகா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச்சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **செந்தமிழ் அச்சகம்**, 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1